பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 21 றவி ஆகிர் 8 இதழ் 352
யாழ்ப்பாணம் புதன்கிழமை 3-2-82

யாழ். பல்கலைக் கழகத்தின்

## கலைப்பீட மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரிப்பு!

(கோண்டாவில்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடமாணவர்கள் நேற்று தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

வணிகத்துறை மாணவர்களின் பட்டம் தொடர்பாக பல்கலைக்கழக [illegible] மான்யக்குழு [illegible] தீர்மானத்தை கண்டிக்கும் வகையிலேயே கலைப்பீட மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்க [illegible] பித்துள்ளனர் என்றும் மாணவர்களைப் பட்டமின்றி நிர்க்கதியாக்குவதும் யாழ். பல்கலைக்கழகத்தினை இழிவு படுத்துவதுமான பல்கலைக்கழக மான்யக்குழுவின் தீர்மானத்தைக் கண்டிக்கும் அதேவேளையில் பல்கலைக்கழக மான்யக் குழு தனது தீர்மானத்தை மறுபரிசிலனை செய்து யாழ். பல்கலைக்கழக கவுன்ஸிலின் தீர்மானத்திற்கு மதிப்பளிக்கும் வரை இம்மாணவர்கள் காலவரையறையின்றி பகிஷ்கரிப்பார்கள் என்றும் மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான மனு ஒன்றைதாம் யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கும், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஸ்டான்லி கல்பகேக்கும் சமர்ப்பித்துள்ளதாக கலைப்பீட மாணவப் பிரதிநிதியும் வணிகமன்ற உபசெயலாளருமான அஸ்ரன் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

1976-ம் ஆண்டில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டு தங்களின் வணிகமாணிப்படிப்பினை பூரணமாக நிறைவேற்றிய மாணவர்களுக்கு வணிகமா

(8-ம் பக்கம் பார்க்க)

# இந்திய ஜனதிபதி ரெட்டிக்கு குதூகல வரவேற்பு

## வழிநெடுகிலும் மக்கள் திரண்டிருந்தனர்

### இன்று அனுராதபுரம் புறப்படுகின்றார்

(கொழும்பு)

**இந்திய ஜனதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டியும் அவரது பாரியாரும் ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுநண்பகல் இலங்கை வந்து சேர்ந்தபோது, குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனதிபதி தம்பதிகளுடன் மகள் அமராவதியும் வந்திருந்தார்.**

கட்டுநாயகா சர்வதேச விமானநிலையத்துக்குள் அமைச்சர்களும் எதிர்க்கட்சித்தலைவர்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் அவர்கள் தம் குடும்பத்தினரும் குழுமிநிற்க, விமானநிலையத்திற்கு வெளியே மக்கள் திரண்டிருந்தனர். பகல் 12-30 மணியளவில் அரசபவனியில் இந்திய ஜனதிபதியும் பாரியாரும் கொழும்புக்கு புறப்பட்டபோது, பன்னிரண்டு மைல் தூர வழிநெடுகிலும் பொதுமக்களும் பாடசாலை மாணவ மாணவிகளும் வீதியின் இருமருங்கிலும் திரண்டுநின்று, கைஅசைத்து வரவேற்று தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் ஜனதிபதி திரு. சஞ்சீவரெட்டியையும் பாரியாரையும் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் பாரியாரும் முதலில் எதிர்கொண்டு வரவேற்றனர். வரவேற்பில் அமைச்சர்களுடன் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்துகொண்டார்.

### குறிப்பிட்ட நேரத்தில்

இந்திய ஜனதிபதியும், பாரியாரும் குழுவினரும் பிரயாணம்செய்த விசேட விமானம், நேற்று நண்பகல் சரியாக பன்னிரண்டுமணிக்கு கட்டுநாயகா சர்வதேச விமான நிலையம் வந்துசேர்ந்தது.

விமானத்தில் ஜனதிபதியின் மகள் அமராவதியும், பாரத தகவல் ஒலிபரப்பு அமைச்சர் வஸந்த் சாத்தே மற்றும் இருபது உயர்அதிகாரிகள், பத்திரிகைக் குழுவினர் ஆகியோரும் வந்திருந்தனர்,

### மங்களபேரிகை முழங்கியது

விமானம் தரையிறங்கி, விமானப்படிக்கட்டு வழியே ஜனதிபதி இறங்கியபோது மங்களபேரிகை முழங்கியது. ஜனதிபதி ஜயவர்த்தனவும் பாரியாரும் எதிர்கொண்டு வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து ஜனதிபதிக்கு மரியாதையளிக்கும்பொருட்டு இராணுவத்தினர் 21 பீரங்கி வெடிகளைத் தீர்த்தனர்.

மூன்று குழந்தைகள் ஜனதிபதிக்கு மாலை அணிவித்து, ஜனதிபதியின் பாரியாருக்கும், மகள் அமராவதிக்கும் பூச்செண்டு வழங்கினர்.

### ஜனதிபதி விருந்தளித்தார்

விமானநிலையத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் 12—30 மணிக்கு அரசபவனியில் இந்திய ஜனதிபதியும் பாரியாரும் கொழும்புக்குப் புறப்பட்டு, பகல் 1—30க்கு ஜனதிபதி மாளிகையை வந்தடைந்தனர்.

இந்திய ஜனதிபதியைக் கௌரவிக்கும்முகமாக ஜனதிபதி ஜயவர்த்தனவும் பாரியாரும் நேற்றிரவு விருந்துபசாரமளித்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சுக்காடியா காலமானர்

சென்னை, பெப். 2

தமிழக முன்னுள் ஆளுநர் திரு. மோகன்லால் சுக்காடியா இன்று தமது 66-வது வயதில் மாரடைப்பால் காலமானர்.

ராஜஸ்தான் மாநில முதல்வராகவும் இருந்த திரு. சுக்காடியா கர்நாடக முதல்வராகவும் கடமையாற்றினர்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை உதய்பூரில் தகனம் செய்யப்படும்.

## சான்றிதழ் பெறுவதில் தாமதத்தை தவிர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

பிறப்பு—திருமணச் சான்றிதழ்களின் பிரதிகள் பெறுவதில் பொதுமக்கள் பெரும் சிரமப்படுவது குறித்து மயிலணி நலன்புரி கண்காணிப்புச்சபை, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது,

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''பிறப்பு—திருமணம் பற்றிய முழுவிபரங்கள் கொடுத்தும், பதிவுப்பிரதிகள் பெறுவதற்கு மாதக்கணக்கில் காத்திருக்கவேண்டியிருக்கிறது.

சான்றிதழ் பிரதிகளை வழங்கும் பொறுப்பை பதிவு உத்தியோகஸ்தர்களிடம், அல்லது உதவி அரச அதிபர்களிடம் கையளிக்கும் பட்சத்தில் வீண் தாமதங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## சோயாவிலிருந்து உணவு தாயாரிப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சோயா அவரையிலிருந்து உணவு வகைகள் தயாரிப்பது பற்றிய பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் போயா தினத்தன்று யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை வந்துள்ள ஐ நா. உணவு விவசாய ஸ்தாபனத்தின் உயர் அதிகாரியான வட கொரியாவைச்சேர்ந்த திருமதி கிம் நடத்தும் இந்த வகுப்பை யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட சபையின் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா ஆரம்பித்து வைப்பார்.

இந்தப் பயிற்சிவகுப்பில் யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியைகளும் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் மகளிர் குழுவைச் சேர்ந்த 20 பெண்களும் கலந்து கொள்வார்கள். (இ)

## யாழ். நூலகத்துக்கு பெப். 7ல் அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல்நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு விழா தைப்பூச தினமான இம்மாதம் 7ம் திகதி நடைபெறவிருக்கிறது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் நூல்நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைப்பார். (மா)

## தேவாவின் கிளிநொச்சி விஜயம் ரத்து

(கொழும்பு)

கிளிநொச்சித் தொகுதியை தனிமாவட்டமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அடுத்து இது குறித்து ஆராய்வதற்காக உயர் அதிகாரிகள் சகிதம் கிளிநொச்சிக்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் மேற்கொள்ள இருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

புங்குடுதீவு

## குழாய்நீர்த் திட்டத்தை கிம் பார்வையிட்டார்

(ஊர்காவற்றுறை)

ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிநிதிகளான திரு. வை. வை. கிம், திருமதி கிம் ஆகியோர் காவலூர் எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. சு. நடராஜா யாழ். மாவட்ட கமநலசேவைகள் உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் ஆகியோருடன் புங்குடுதீவு கண்ணகையம்மன் கோவிலடியில் அமையவிருக்கும் புங்குடுதீவு குழாய் நீர்த் திட்டத்தை நேற்று பார்வையிட்டனர்.

வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்ருடியோவில், முகாமையாளர், காசாளர் பதவிகள் வெற்றிடமுண்டு. விண்ணப்பிப்போர் தமது அனுபவ சான்றிதழ்களுடன் 07—02—82 க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பதாரிகள் யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருப்பின் விரும்பத்தக்கது. விளம்பர இல: 2168 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2168

## "மனேகரன், பகீரதனை ஒன்றரை மாதமாகக் காணவில்லை"

### கைலாசபிள்ளையார் கோவிலடி கொலைவழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது அருளானந்தம் திருநாவுக்கரசுஇறந்துபோனர் என்று அறிந்திருக்கவில்லை''

கைலாசபிள்ளையார் கோயிலடியில் கடந்த வருடம் ஜூலை 30 ம் திகதி அருளானந்தம் திருநாவுக்கரசுவை அதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் வைகுந்தவாசன் (ராதா). என்பவர் குத்திக் கொலை செய்ததாக யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 4 வது சாட்சியான கந்தையா சேகர் சாட்சியமளிக்கையில் இவ்வாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

எதிரி தரப்பில் சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது

சட்; 30.7.81 இரவு9.45க்கு நீர் இவ்வழக்கின் மற்றச் சாட்சிகளைச் சந்தித்தீர்?- ஆம்.

சட்: இறந்தவரைப்பார்க்க ஆஸ்பத்திரிக்குச் சென்றீரா? — ஆம்

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஒன்றின் விலைவேறு: மதிப்பு வேறு
மதிப்பை மறந்து எதற்கும் விலை பேசுபவர்
வாழ்க்கையில் நம்பிக்கையற்றவரே.
— ஒஸ்கார் வைல்ட்

## நமது நோக்கு

# வாழ்க்கைச் செலவுக்கு வரம்பு கட்டு

தொல்லைகளைத் தாங்கும் மனவலிமைக்கு அடிக்கடி விழாக்களும் கொண்டாட்டங்களும் தற்காலிக நிவாரணம்; தொல்லைகளிலிருந்து அவை மனதைத் திசைதிருப்புவதாலல் நாட்டின் குறை உயிரையே கொன்றுவிடும்.

படுக்கையை விட்டெழுந்தநேரம் தொட்டு மீண்டும் நித்திரைக்குப் போகும் வரைக்கும் மனித யந்திரம்இன்றையவாழ்வை எவ்வாறு சமாளிக்கப் போகின்றேமென்ற அச்சத்தால் பீடிக்கப்படுகிறது.

தேங்காயின் விலை கேட்டு அதிர்ச்சியடையாமல் அதனைத் தவிர்த்துவாழப் பழகுங்கள் என்பது தேங்காய் வியாபாரியின் இன்றைய விற்பனைச் சம்பிரதாயம்.

மக்களின் அத்தியாவசிய உணவுப்பொருட்களை கட்டுப்படுத்தும் அவசர பணியில் இறங்கியிருக்கும் அமைச்சர் உபகுழு என்ன செய்கின்றது? என்ன மாற்றம் கண்டோம்.

மரக்கறி விலைகள் ஏறிக்கொண்டு போகின்றன. விற்பனைத் திணைக்களம் கொள்வனவுக்கு முதலில்லாமல் திறைசேரி வாயிலில் 'கூதற் காய்வதாக' வர்த்தக அமைச்சர் முறையிடுகின்றார். வசதிகள் கிடைத்த போதெல்லாம் விற்பனைத் திணைக்களத்தின் 'வண்டவாளம்' நாடறிந்த கதை. ஒரு சில விற்பனை நிலையங்கள் சேவை மனப்பான்மையுடனும் வியாபாரத் திறமையுடனும் இயங்குவது புறநடை.

போதிய முதலுடன் வியாபார மதிநுட்பமுடைய ஊழியர்கள் நாட்டு மக்களைப் பாதுகாக்க மனம் வைத்தால் தரகர் இருந்த இடம் தெரியாத வகையில் தரை மட்டமாக்கப்படுவர். ஆனல் அது இன்னும் கனவாகவே இருக்கிறது.

குழந்தைகளுக்கு அவசியமான பால்மா வகைகள் நாளுக்கு நாள் விலை ஏறுகின்றன. பற்றாக்குறையே பதுக்கலுங்கூட — காரணம்.

இதற்கு வியாக்கியானம் செய்வதுவீண்; குழைந்தைகளின் பசிதீர உதவாது. ''குழவி தாய் முகம்நோக்க மனைவி என்முகம் நோக்க நான் இலங்கை வானொலியில் செய்தியின் பின்னணியென்ற புளுகுப் பெட்டியைத் திறக்க வேண்டியது தான்!

மேனாட்டு வர்த்தகத்தில் பால் பற்றாக்குறை பேசப் படவில்லை ஐரோப்பிய பொருளாதார சமுதாய அங்கத்துவ நாடுகளில் பால் உணவு வகைகள் பெருமளவில் இருப்பதாகக் கருதப் படுகிறது. உலகம் சுற்றும் அமைச்சர்களும் அதிகாரிகளும் உல்லாசப் பயணங்களிலாவது இதுபற்றி செயற்பட முடியாதா?

அரசுக்கும் வர்த்தகத்துக்கும்உள்ள இடைவெளிவெகு தூரமென்பதில் ஐயமில்லை.

கடந்த பல சாதனைகள் சான்று பகரும்.

தனியார் துறையைத் தூக்கிப் பிடிப்பதற்கு அதுவே காரணம். தனியார்துறை அரசின் பலவீனத்தை உணர்ந்தமையால் தான் இட்டது சட்டமென்று பாவனையாளர்களைப் பலிபோடுகின்றது. கண்ணாடி அலுமாரிகள் நிரம்ப விற்பனைப் பொருட்கள். விலை நாளுக்குநாள் அதிகரிக்கும் காய்ச்சல் போன்றது.

சீனியை இறக்குமதி செய்த தனியார்துறையினர் கொள்வனவிலும் குறைந்த விலை; விற்பனவிலும் அரசிலும் பார்க்கக் குறைந்தவிலை எத்துணை சாமர்த்தியம்?

சீனி உற்பத்திசெய்யும் நாடுகளுடன் முன்கூட்டியே தேவையான தொகைக்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் — விலைகுறைந்த காலத்தில் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு அவ்வித ஒப்பந்தம், இந்த உயிரூட்டும் பொருளுக்குத் தட்டுப்பாட்டைத் தடுக்க முடியும்.

விவசாயிக்கும் தோட்டக்காரனுக்கும் உரம் நியாயமான விலைக்கு கிடைக்கும்படி உதவவேண்டும். உரம் இறக்குமதியில், கள்ளக்கடத்தலோ வேறெந்த துஷ்பிரயோகமோ இடம்பெறமாட்டாது; அதைக்கொள்வனவு செய்வதிலும்காலம்பார்த்து தேவையான 'ஸ்ராக்கை' முற்பணம் கட்டி வேண்டுவதே விவேகமாகும்,

எல்லா வகையிலும் — கல்வி உட்பட — மான்யம் நீக்கப்படவேண்டுமென்ற உலக வங்கியின்கட்டளையை தலைமேற்கொண்ட அரசு, எவ்வித அவசியமுமின்றி தேசிய சேமிப்பு வங்கிக்கு மான்யம் வழங்குகின்றது. சேமிக்கப் பழகியவர்களே அந்த வங்கியின் வாடிக்கைகாரர்களாகவிருக்கின்றனர்; அவர்கள் தங்கள் முதலீட்டுக்கு நியாயமான வரி தவிர்ந்த வட்டியைப் பெற்றுக்கொள்கின்றனர். இத்தகைய வட்டிக்கு அரசு 1980ல் 35 கோடி 80 லட்சம் ரூபாவை மான்யமாக வழங்கியது; அரசாங்க ஈடாக இருந்த முதலுக்கு 37 கோடி 50 லட்சம் ரூபாயை வட்டியாகக் கொடுத்தது. சிக்கனத்தின் சிறப்பு எவ்வாறிருக்கும்?

எவ்வகையில் பார்த்தாலும் நாடு, தேனும் பாலும் கலந்து பாயும் நாடென்ற பிரசாரமும் எங்கு எப்போது கடன் 'பிரிக்கலாம்' என்ற ஆவேசமுமே இன்றைய பொருளாதாரச் சீர்கேட்டுக்கும் மக்கள் தினசரி வாழ்வில் மலைபோல் குவியும்இன்னல்களுக்குக் காரணம்,

விடயம் தெரிந்த அனுபவம் பெற்ற விவேகிகளின் கருத்துக்களை வரவேற்று நிலைமையைச் சீர்செய்க.

### பொது வாழ்வில் ஒழுக்க நெறி

# பின்செல்கிறவர்களை சரியாக வழிநடத்தும் தலைமை வேண்டும்

பொது வாழ்க்கையில் ஒழுக்க நெறி குறைந்து வருவதால் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து விடுகின்றனர் என்று மிகவும் பொருத்தமானதும் இன்றும் என்றும் பொருந்தக் கூடியதுமான கருத்தை இந்திய ஜனதிபதி சுதந்திரதினச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். இதனை நாம் சுடலை ஞானதத்துவம் என்று அலட்சியப் படுத்திவிட முடியாது அரசியல் அனுபவத்திலும் சேவை மூப்பு முதிர்ச்சியிலும் தான் இக் கருத்துகள் தொனிக்கின்றன.

அண்மையில் 'ஈழநாடு' ஆசிரியத் தலையங்கத்தில் கைப்புளத்திலேந்திக்கனகமழை தந்தவள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால் ஒழுக்கத்திற்கும் கனகமழை ஊட்டியவளுக்கும் தொடர்பு இருக்கத்தான் வேண்டும். அந்த ஒழுக்கம் அங்குதான் ஆரம்பிக்க வேண்டும் வெறும் பேச்சுக்களால் நாம் இதனை பெறமுடியுமெனக் கருதினல் அதனை விடமடமை வேறென்றும் இருக்க முடியாது இந்த ஒழுக்கத்தை நிலை நாட்ட நிறுவன சபைகள் சங்கங்கள் தலைமைகள் முயற்சி செய்கின்றன புரிகிறதா? இருதயம் ஒன்றை நினைத்து நாக்குவேறு ஒன்றை சொல்வதால் தான் இந்த நிலை, இதனை யார் செயற்படுத்த முடியும்? பத்திரிகைகளில் பிரமுகர்கள் பேசுவது பற்றி செய்திகள் வருகின்றன இவற்றினல் ஒருசத விகிதத்திற்காகுதல் நாம் நடந்து கொள்கின்றேமா? அப்படியானல் அப்பேச்சினல் தான் அல்லது மேடையை ஏற்படுத்தியதனல் தான் என்ன பயன்?

உதாரணத்திற்கு வைத்துக் கொள்வோம் ஒரு சமயப் பிரசாரகர் பேசுகின்றார் என்று அவர் பேச்சு பிரதி உபகாரம் கருதியதாக அமையாது சமயத்தை வளர்க்க வேண்டிய உந்திப்பினல் தான் அவரது பேச்சுஅமைந்திருக்கும்அதற்கு மிகுதியாக அவர் நோக்கம் கொண்டவராக இருக்க மாட்டார்; ஆகையால் பொது வாழ்ச்சையில் ஒழுக்கம் வேண்டும் என குறிப்பிட்ட பொழுது இந்திய ஜனதிபதி நாட்டை ஆள்பவர்களையும் அரசியல் எண்ணம் கொண்ட சட்சித்

**எஸ். கே. ரி.**

தலைவர்களையும் பற்றியே மனதில் குறிப்பாக எண்ணியிருக்க வேண்டும், பிற அமைப்புகளும் நாட்டில் இருக்கின்றன, ஆனல் அவர்களுக்கும் ஒழுக்கம் வேண்டிய தில்லை என்ற கருத்து இதனல் கொள்வதற்கில்லை. ஒரு நாட்டையோ தேசத்தையோ ஆள்பவர்கள் அரசியல் வாதிகள் அத்தோடு நாடு நலம் பெற சட்டம் இயற்றுபவரும் அவர்களே அதனல் அவர்களுக்கு ஒழுக்கம் வேண்டியிருக்கின்றது, ஒழுக்கம் இருந்தால் தான் பிறரை ஒழுக்க சீலர்களாக்கலாம், நாட்டில் மதுவிலக்கை நடைமுறைப் படுத்த வேண்டும் என சட்டத்தை இயற்றி விட்டு பொறுப்பான ஆட்சியாளர்களில் ஒருசிலர் மது போதையில் மதிகெட்டு இருந்தால் ஒழுக்கம் என்னகும் இதைப்போல கண்துடைப்பு

வேறு என்ன வேண்டும், இக் காரணங்களினல் மிக முக்கியமாக அரசியல் கட்சிகளுக்கு சிறந்த தலைமை வேண்டப்படுகின்றது, கட்சிகளை தொடர்ந்து நடாத்துவதற்கும் அதிகாரத்தைக்கைப்பற்றுவதற்குமாக தலைமை இருக்கக் கூடாது தனியான வேற்றுமைகள் காரணமாக கட்சிகள் மக்கள் மத்தியில் இருந்து நம்பிக்கை இழக்கின்றன. மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று விட்டோம் என்ற முனைப்பினல் சில தலைமைகள் காலத்திற்கு காலம் மக்களோடு ஒருமைப்பாடு காணுத கருத்துக்களை வெளியிடுகின்றன இதனல் குழப்பமான நிலை தோன்றுகின்றது இதனை தவிர்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாத தொன்றாகும்.

#### சமூகம்

பல குழுக்களை உள்ளடக்கியது தான் சமூகம். இப்படியான குழுக்களில் தனிமனி தன்பங்குகொண்டு அவற்றின் செயற்பாடுகளில் பங்குதாரராகின்றான். குழுவில் சார்ந்து நிற்பதனலும் அதன் செல்வாக்கினலும் தனிமனிதன் நடத்தை மாற்றத்துக்குள்ளாகிறது. இதன் காரணமாக தனித்தன்மையை மறந்து குழுவுடன் சேர்ந்து அதன் சொற்படி செயற்பட முற்படுகின்றான். இதுபோல தனிமனிதர்களும அமைப்புக்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து அதனமேல் ஆதிக்கம் செலுத்துகின்றனர் இந்தமுனைப்பில் அவர்களைத் தலைவர்கள் என நாம்கருதுகின்றேம். இத்தலைவர்கள் ஓர் அமைப்பை உருவாக்கவும் கட்டுப்படுத்தவும் இயலும் ஆனல் பின் செல்வோர் இல்லையேல் தலைமை எதற்கு? இதனை அறிந்துதான்போலும் வருந்தியேனும் ஒழுக்கம் பேணப்பட வேண்டுமெனவும் ஒழுக்கம் உயிரினும் மேலானதாகவும் குறள் வலியுறுத்தியுள்ளது.

#### பொதுவாழ்வில் அறநெறி

பொதுவாழ்வில் அறநெறிப் பண்புகள் அருகிவருகின்றன. இதனை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அறைகூவல் விடப்படுகிறது. இதனைசெய்ய வேண்டியவர்கள் யார்? சாக்கடையிலுள்ள பிச்சைக்காரர்களல்ல. சில சமயங்களில் அப்படியெல்லாம் வாழ்ந்து இன்றெல்லாம் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்க தலைவிதிவசமாக உச்சநிலைக்கு உயர்த்தப்பட்ட உயர்ந்தோர்கள் தான். நாட்டில் எவருக்கும் இராத செல்வாக்கு அவர்களுக்குத்தான் உண்டு. அவர்கள் இல்லாமல் காரியங்களை நடாத்த நாமே விரும்புவதில்லை. அத்தகையோர்க்கு பொது வாழ்வில் தூய்மை யோக்கியம் வேண்டுப் தான். அதனை 'ஈழநாடு' அதன் 'நமது நோக்கு' தலையங்கத்தில் சிறப்பாக வலியுறுத்தியுள்ளமை பாராட்டுதற்குரியது. இத்தகைய கடாட்சத்திற்கு உள்பட்டோர் தமது நிலையையும் தாம் வழிநடத்துபவர்களின் மன உணர்வுகளையும் கருத்தில்கொண்டு நடந்து கொள்ள கடமைப்பட்டுள்ளார்.

இதனையும் விட தலைமைக்கு அத்தியாவசியமானதும் இன்றியமையாததுமான சில பண்புகள் உண்டு. தலைமை என்பது தலைவன் என்னும் தனி மனிதனது சிறந்த பண்பினல்மாத்திரம் ஏற்படுவதன்று. ஒரு நிலையில எல்லா உறுப்பினர்களிடமிருந்தும் தேவைப்படும்

[7ம் பக்கம் பார்க்க]

# மகா சிவராத்திரியும் விடுமுறை நாளும்

இலங்கை சுதந்திரம் அடைந்தபிறகு 1948 — 50ம் ஆண்டுகளிலிருந்து மகா சிவராத்திரி நாள அரசாங்க விடுமுறை நாளாக்கப்பட்டிருக்கிறது. மேற்குறித்த ஆண்டுகளுக்கு முன் ஆடி அமாவாசைக்கு அரசாங்க விடுமுறை விடப்பட்டு வந்தது. இப்போது ஆடி அமாவாசை விடுமுறைநாள் இல்லை. இது நிற்க.

வருடாவருடம் மகா சிவராத்திரி நாளை நிர்ணயிப்பதிலும், அரசாங்கம் விடுமுறை விடவேண்டிய நாளிலும் இந்துக்களிடைடியே சர்ச்சை எழுந்து கொண்டே வருகிறது

### மக்கள் கருத்து

மகா சிவராத்திரி நாளை நிர்ணயிப்பதில் பஞ்சாங்கம் கணிப்போர் சில வருடங்களில் ஒரே மாதத்தில் வெவ்வேறு நாட்களைக் குறித்து மேலும் சர்ச்சையை உண்டாக்குகின்றனர். இதைவிட, விடுமுறை எந்த நாளில் விடவேண்டுமென்பதிலும், பொதுமக்களிடையே, கருத்து வேற்றுமை உண்டு. அதாவது நித்திரையின்றிக் கண் விழித்திருந்த இரவுக்கு அடுத்த பகல் நாளையே விடுமுறையாக விடவேண்டுமென்ற கருத்துப்படப் பத்திரிகைகளில் கடிதங்கள் எழுதுவதும், அமைச்சர்கள் முதலானேரை இவ்விடயமாகப் பேட்டிகண்டு கருத்துத் தெரிவித்து நித்திரை முழிக்கும் இரவுக்கு அடுத்த பகல் நாளையே விடுமுறையாக்க நினைப்பது தவறுகும். விரதம் அனுஷ்டிக்கும் தினமே பிரதானமானது. நன்றுகச் சாப்பிட்டுவிட்டு ஆறுதலெடுக்கும் நாளல்ல முக்கியமானது. ஆகவே இந்தச் சிறந்த விரத நாளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கவேண்டுமே தவிர, அடுத்த நாள் பகல் நன்கு சாப்பிடுவிட்டுக் கண் அயர்ந்து பகலில் தூங்கி ஆறுதலெடுக்க விடுமுறை விடப்படாது. அப்படி விடுமுறை விடுவது மகா சிவராத்திரி நோன்பின் தாற்பரியத்தை அவமதிப்பதாகும்.

ஆகவே சைவப் பெரியோர்கள், அரசாங்கத்துக்காக சைவநெறி எழுதுவோர், இந்துமாமன்றம், கொழும்பு விவேகானந்தசபை, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, இந்து சாதனம், சிவதொண்டன் முதலிய இந்துப் பத்திரிகைகள் இந்த விரதங்களின மகிமையை விளக்கியும், விடுமுறை நாட்கள் விடவேண்டிய நாள் எது என்பதை விளக்கியும் பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வேண்டுகோள் விடுக்க முன்வரவேண்டும்.

மகா சிவராத்திரி நாளுக்குப் பிறகுவரும் அடுத்த பகல் நாளை விடுமுறை நாளாகச் செய்வது இந்தப் புனித விரத தினத்தை அவமதித்துக் கேலிக் கூத்தாக்குவதாகும்.

இது விடயமாக இந்து கலாசார அமைச்சர் உலக இந்து மகாநாடு கூடும்போது தீர ஆலோசனை செய்து ஒரு சிறந்த முடிவு காண்பது விவேகமானது என்று விண்ணப்பித்து நிற்கும்.

வே. சு. நடராசா
நல்லூர்.

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை:

# "அரசிடமோ, கல்வி அமைச்சிடமோ முறைப்பாடு செய்வதில் பயனில்லை"

## ஆசிரியரை பெற்றேரே நியமிக்க வேண்டும்

### கருத்தரங்கில் வவனியா எம்.[illegible].பி.

(வவனியா)

''எமது மாணவர்கள் கல்வி கற்கவேண்டுமானுல் பெற்ரேர்களாகிய நாமே எமது செலவில் தகுதியான ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். எமது பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறை பற்றிக் கல்வியமைச்சிடமோ, அரசாங்கத்திடமோ முறையிடுவதில் எவ்வித பலனும் இல்லை.''

வவனியா மாவட்ட சிரேஷ்ட கனிஷ்ட பாடசாலைப் பெற்ரோர் பிரதிநிதிகள் மத்தியில் நடைபெற்ற கருத்தரங்கில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:

**ஆசிரியர் பற்ருக்குறை**

''வவனியா மாவட்டத்தில் உள்ள பத்து தமிழ் மகாவித்தியாலயங்களில் 24 கனிஷ்ட வித்தியாலயங்களிலும் 110 ஆரம்பப் பாடசாலைகளிலும் 342 ஆசிரியர்கள் 1980ம் ஆண்டு கல்வியமைச்சு நடாத்திய ஆய்வின்படி பற்ருக்குறையாக இருக்கின்ருர்கள்.

''1981ம் ஆண்டிலும் 1982ம் ஆண்டிலும் 2500க்கு மேற்பட்ட மாணவர்கள் புதிதாகப் பாடசாலையில் சேர்ந்துள்ளார்கள். இவ்விரு ஆண்டுகளிலும் 85க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுள்ளார்கள்! இவர்களது எண்ணிக்கையில் காற்பங்கேனும் ஆசிரிய இடமாற்றத்திஞல் நிரப்பப்படவில்லை.

**இடமாற்றம்: ஒரு சங்கீதக்கதிரை**

':சென்ற ஆண்டு இறுதியில் ஆரம்பமாகித் தற்போது நடைபெறுகின்ற ஆசிரியர்களின் இடமாற்றம் 'சங்கீதக் கதிரைநிகழ்ச்சியாகவே' நடைபெறுகின்றது. இன்று வருகின்ற இடமாற்றக் கட்டளை நாளை ரத்துச்செய்யப்படுகின்றது, இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் அரைப் பங்கினரேனும் இன்னமும் தங்கள் பாடசாலைகளில் கடமையேற்கவில்லை. கல்விச்சேவை ஆணைக்குழுவில் செல்வாக்குள்ளவர்களைத் தேடித் திரிவதிலேயே இடமாற்றக்கட்டளை பெற்ற ஆசிரியர்கள் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகின்ருர்கள். வவனியா மாவட்டத்திலிருந்து பயிற்சிக் கலாசாலைக்குச் செல்லுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கை 75 ஆகும். பிற மாவட்டங்களிலிருந்தும், பயிற்சிக்கலாசாலையிலிருந்தும் வவனியா மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களது எண்ணிக்கை இன்றுவரை ஐம்பதைத் தாண்டவில்லை.

**ஆசிரியர்கள் இல்லை**

''மகாவித்தியாலயங்களுக்கு வேண்டிய பாடங்களுக்கு உரிய ஆசிரியர்கள் இல்லாது கல்வி பாதிக்கப்படுகின்றது. கனிஷ்ட பாடசாலைகளில் பரிதாபத்திற்குரிய முறையில் ஆசிரியர்கள் பற்ருக்குறை நிலவுகின்றது. இம்மாவட்டத்திலுள்ள 110 ஆரம்பப் பாடசாலைகளில் 50க்கு மேற்பட்ட பாடசாலைகள் தனியொரு ஆசிரியருடன் இயங்குகின்றன. சில பாடசாலைகள் அறவே ஆசிரியர்கள் இல்லாது மூடப்படுகின்றது.

**22 சிங்கள மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்**

வவுனியா மாவட்டத்தில் உள்ள 22,000 மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உயர் கல்வியைப் புகட்ட வேண்டுமென்பது தவிர்க்க முடியாதது. 1977ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் 25,500க்கு மேற்பட்ட சிங்கள ஆசிரியர்களுக்கு நியமனம் கொடுத்திருக்கின்றது' அதேவேளை இந்நாட்டின்சனத்தொகையை ஏறக்குறைய மூன்றிலொரு பங்கை வகிக்கின்ற தமிழ் பேசும் மக்களின் கல்விக்காக 2,000 ஆசிரியர்களையேனும் நியமனம் செய்யவில்லை. 22 சிங்கள மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் சிங்கள ஆசிரியர்கள் இருக்கிருர்கள். 33 தமிழ் மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அளவில்கூட தமிழ் ஆசிரியர்கள் இல்லை. பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியோ, கேள்வி கேட்டோ, அமைச்சரை நேரடியாகக் கண்டு பேசியோ கடந்த இரண்டரை ஆண்டுகளிலும் எந்தப் பலனையும் நாம் காணமுடியவில்லை. எங்கள் குழந்தைகளுக்கு ஏற்ற கல்வியைக் கொடுக்கவேண்டியது எங்கள் கடமை. ஒரு வேளை உணவைக்கூட ஒறுத்து எமது செலவில் தகுதியுள்ள ஆசிரியர்களை நியமித்து எங்கள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டவேண்டியது எங்கள் கடமையாகும்.'' (க)

---

வவனியா

ஆசிரியர்களுக்கான

## நிதிப்பிரிவு

(வவனியா)

ஆசிரியர்களுக்கான கடன் வசதிகள் போன்ற நிதி விடயங்களைக் கவனிப்பதற்கு வவுனியா கல்வித் திணைக்களத்தில் புதிய நிதிப்பிரிவு கல்வியமைச்சின் பிரதம கணக்காளர் திரு. ஜீ, எஸ். பல்லேவத்தவினுல் திறந்துவைக்கப்பட்டது

இதுவரை காலமும் வவுனியா கல்வித் திணைக்கள நிதி விடயங்கள் யாழ்ப்பாண நிதிப் பிரிவின் கீழ் செயற்பட்டுவந்தது.

இவ்வைபவத்தில் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களக் கணக்காளர் திரு. என், திருநாவுக்கரசு, வவுனியா கல்விப் பணிப்பாளர் திரு. சிவபாதம், வட்டாரக் கல்வியதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

புதிய நிதிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதனுல் ஆசிரியர் பலருக்குத் தமது நிதி விடயங்களைக் கவனிப்பதற்கு இது பெரும் உதவியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

---

கம்பர்மலை அறுவர் கொலை வழக்கு:

# 'வெடிச்சத்தம் கேட்டு விழித்தபோது துரைராசா துவக்குடன் நின்ருர்'

### மகேஸ்வரன் சாட்சியம்

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

''சம்பவதினத்தன்று வெடிச்சத்தம் கேட்டு நித்திரையிலிருந்து விழித்தபோது துரைராசா கையில் துவக்குடன் நின்ருர். தேவராசா கையில் சோக் பெட்டிபோன்ற பெட்டியொன்றுடன் நின்ருர். இன்னுமொருவர் அருகில் நின்ருர். கருணேஸ்வரனின்உடலிலிருந்துஇரத்தம்பாய்ந்து கொண்டிருந்தது''

இவ்வாறு கம்பர்மலை பயங்கர துப்பாக்கி சூட்டு அறுவர் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கம்பர் மலையைச்சேர்ந்த வைத்திலிங்கம் மகேஸ்வரன் (வயது 23) சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

இக்கொலைவழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

இக்கொலைவழக்கின் எதிரிகள் எழுவரில் வல்லையில் வைத்துத் துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் கொலைசெய்யபட்ட மூன்று எதிரிகளும் தவிர்ந்த ஏனைய நான்கு எதிரிகளும் ஆஜர் படுத்தப்பட்டிருந்தனர்,

பொலிசார் சார்பில் வல்வெட்டித்துறை பொலிசைச் சேர்ந்த டேவிட்டும் பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எம். வேலும் மயிலும் ஆர். டி. இரத்தினசிங்கம் ஆகியோரும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஸி. மோதிலால் நேரு. என். கிருஸ்ணராசா, கே. முத்துக்குமாரு, எஸ். சிவானந்தன் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர். தொடர்ந்து சாட்சியமளித்த மகேஸ்வரன் கூறியதாவது:

**ரோகிணி அம்மா வீட்டில்**

25—7—81 அன்று இரவு ரோகிணி அம்மாவீட்டில்நான் படுத்திருந்தேன். அவர் இக்கொலைவழக்கின் ஒரு சாட்சி நான் வழமையாக ரோகிணி அம்மா வீட்டிலேயே படுப்பேன். அவ்வீட்டில் ஆண்கள் இல்லாதபடியால் ரோகிணி அம்மாவுக்குத் துணையாகவே நான் படுப்பேன்,

25—7—82 அன்று ரோகிணி அம்மா வீட்டில் நானும் கருணேஸ்வரனும் ஒரு கொட்டிலுள்ளும் ரோகிணி அம்மா இன்னெரு கொட்டிலுள்ளும் படுத்திருந்தோம். அன்றைய தினம் நான் ரோகிணி அம்மா வீட்டில் படுத்திருந்தபோது கருணேஸ்வரன் நிலத்தில் பாயிலும் நான் வாங்கிலும் படுத்திருந்தோம். அக்கொட்டிலின் அரிக்கன் இலாம்பு மொன்று எரிந்து கொண்டிருந்தது. அன்று நான் 8 மணிக்குப் படுக்கைக்குச் சென்றேன்.

**வெடிச்சத்தம் கேட்டது**

நான் நித்திரையிலிருந்த போது ஒருவெடிச்சம் கேட்டு முழித்துப்பார்த்தபோது துரைராசா கையில் துவக்கு இருந்தது. தேவராசா கையில் சோக் பெட்டி போன்ற ஒரு பெட்டியிருந்தது. அவர்கள் இருவரையும் தவிர இன்னுமொருவரும் நின்ருர். அவரை எனக்குத் தெரியாது. அவர்கள் இருவரும் இன்று மன்றில் இல்லை.

''நான் கருணேஸ்வரனைப் பார்த்தபோது அவரது உடலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. அவர் இறந்து விட்டார். அந்த எதிரிகள் என்னைக் கண்டார்களோ என்பது எனக்குத்தெரியாது. அவர்கள் படலையை அறுத்துக் கொண்டு போஞர்கள். நான் தம்பிப்பிள்ளையின் வீட்டிற்கு ஓடி விட்டேன். தொடர்ந்தும் நாராயணசாமி வீட்டுப் பக்கமாக வெடிச்சத்தங்கள் கேட்டன. நாராயணசாமி என்பது இறந்த கருணேஸ்வரனின் தகப்பஞர்,

**இறந்து கிடந்தனர்**

பொலிஸ் ஜீப் வண்டி நாராயணசாமியின் வீட்டிற்கு வந்த பின்பு நான் அங்குபோனேன். அங்கே நாராயணசாமியின் மனைவி அழகம்மா, தாய் அழகம்மாஆகியோர் இறந்ததைக் கண்டேன், நான் வீட்டிற்கு உள்ளே போகவில்லை பின்னர் ரோகிணி அம்மா வீட்டிற்குப் போய் கருணேஸ்வரனையும் பார்த்தேன். விடிந்தபிறகு பொலிசாருக்கு வாக்குமூலமளித்தேன்.

**குறுக்கு விசாரணை**

2ம், 3ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். கிருஸ்ணராசா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: சம்பவத்தன்று நீர் கண்விழித்தது. ஒரு வெடிச்சத்தம் கேட்டு? — ஆம்.

சட்: அதற்குப்பின் ரோகிணி அம்மாவீட்டில் வேறு வெடிச்சத்தங்கள்கேட்கவில்லை ஆம்.

சட்: பின்பு நீர் தம்பிப்பிள்ளை வீட்டிற்குப்போகும்போது நாராயணசாமி வீட்டில் வெடிச்சத்தம் கேட்டது? ஆம்.

சட்: நீர் படுத்திருந்த வீட்டிற்கும் தம்பிப்பிள்ளை வீட்

( 6ம் பக்கம் பார்க்க)

---

சோவியத் நகரங்களில்

# இலங்கை கலைப்பொருள் புகைப்படக் கண்காட்சி

மாஸ்கோ, பெப். 2

இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ராஜரீகஉறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 25வது ஆண்டு நிறைவையும் இலங்கையின் சுதந்திர தினத்தையும் முன்னிட்டு சோவியத் இலங்கை நட்புறவு விழாவொன்றை நடாத்துவதுஎன்று இங்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தவிழா நிகழ்ச்சிகளில் உஸ்பெக், துருக்மேனிய. தாஜிக். லத்னிய, என்தோனியக் குடியரசுகளில் உள்ள நட்புறவுக் கழகங்களின் கிளைகளும் பங்குபற்றவுள்ளன.

இங்கு கடந்த வாரம் நடைபெற்ற சோவியத்—இலங்கை நட்புறவுக் கழகத்தின் கமிட்டிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உரைநிகழ்த்திய ரஷ்ய சம்மேளனத்தின் மீன்பிடித்துறை அமைச்சர் இலங்கை மக்களது வாழ்க்கையையும் கலை, கலாசாரத்தையும் சோவியத் மக்களுக்குப் பரிச்சயப்படுத்தும்வகையில் கழகம் நடத்திய பலநிகழ்ச்சிகளையும் சுட்டிக்காட்டினுர்.

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள நட்புறவு விழா 10 தினங்களுக்கு நடைபெறும். பெப்ரவரி 9ம் திகதி மாஸ்கோவில் உள்ள நட்புறவு மாளிகையில் ஒரு மாபெரும் கட்டமும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

பல சோவியத் நகரங்களில் இலங்கையின் புராதன கலைப்பொருட்களினதும் புகைப்படங்களினதும் கண்காட்சிகள் நடைபெறவுள்ளன. இலங்கைக் கலைஞர் எஸ். திஸநாயகாவின் பட்டிக்கணகாட்சி ஒன்று தாலின் நகரில் நடைபெறவுள்ளது. இலங்கையிலிருந்து இலங்கை—சோவியத் நட்புறவுக் கழகத்து கோஷ்டி ஒன்று இந்த விழாவில் பங்குபற்றும். அதேவேளையில் சோவியத்—இலங்கை நட்புறவுக் கழகத்தின் தூதுக்குழுவினர் இலங்கை வருவர்.

---

தமிழக சட்ட -- மேலவை கூட்டு கூட்டம்

# தி. மு. க., முஸ்லிம்லீக் பகிஷ்கரிப்பு; இந். மார்க். கம்யூனிஸ்ட் வெளிநடப்பு!

### அ. தி. மு. க. அரசின் போக்குக்கு எதிராக போர்க்கொடி

சென்னை, பெப். 2

தமிழக சட்ட — மேல்சபை கலப்புக்கூட்டத்தை பிரதான எதிர்க்கட்சியான தி. மு. க. வும் இந்திய முஸ்லிம் லீக்கும் பகிஷ்கரித்தன.

இத்தவேளையில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியும், மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சியும் சபைக்குச் சென்று சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

அ.தி.மு.க.அரசின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிக்கும் வகையிலேயே தமது கட்சி உறுப்பினர்கள் சபைக்குச் செல்லவில்லையென தி. மு. க. வையும், இந்திய முஸ்லிம் லீக்கையும் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சபை நிகழ்ச்சிகள் ஆரம்பித்தபோது சபைக்குச்சென்ற தாங்களும் அ. தி. மு. க.அரசின் போக்கைக் கண்டிக்கும் வகையிலேயே சபையிலிருந்து வெளிநடப்புச் செய்ததாக இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சபைக்குச் சென்ற உறுப்பினர்கள் தமிழக ஆளுநர் ஜனுப் ஷாலிக்அலி உரையாற்றுவதற்காக சபைக்குள் வந்தும் வெளிநடப்புச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆளுநரின் உரையை அடுத்து இரு சபைக் கூட்டங்களும் ஒத்திவைக்கப்பட்டன. (இ)

வெடியரசன்கோட்டை


# தொல்பொருள் ஆய்வுபற்றி

## இன்று அரச அதிபருக்கு அறிக்கை




[நெடுந்தீவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள வெடியரசன் கோட்டைப் பகுதியில் காணப்படும் தொல்பொருள்கள்பற்றிய ஆய்வு குறித்து அறிக்கையொன்றை யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த கலாநிதி சி. க.சிற்றம்பலம் இன்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் கையளிக்கின்றார். அந்த அறிக்கையின் விபரம் இங்கு தரப்படுகின்றது.]

நெடுந்தீவின் வடமேற்குப் பகுதியில் வெடியரசனால் அமைக்கப்பட்டதாக நம்பப்படும் கோட்டைப்பகுதியில் காணப்படும் தொல்லியல் எச்சங்களை ஆய்வதே எமது நோக்கம், வெடியரசன் ஒரு வரலாற்றுப்புருஷன் என்பது பற்றியோ, அல்லது அவன் இவ்விடத்தில் கோட்டையைக் கட்டியதற்கான வேறு பல சான்றுகளை இவ்விடத்தில் காணப்படும் சான்றுகளுடன் தொடர்புபடுத்தி ஆய்வதோ, நமது நோக்கமன்று. தற்போதைய நிலையில் இங்குள்ள தொல்லியல்சான்றுகள்எமக்கு




எடுத்துக்காட்டுவது யாதென அறிவதே எமது முயற்சியாகும்.

இவ்விடத்தில் காணப்படும் தொல்லியற் சின்னங்களின் இறங்குதுறையிலிருந்து அநேகமாக 6 மைல் தூரத்தில் இத்தீவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. (படம்—1) இப்பகுதி பொதுவாக இத்தீவில் நன்னீர்ப்பிராந்தியமாக இருப்பது மட்டுமன்றி இந்தியாவிலிருந்து இலங்கைவரும் போது முதலில் எதிர்நோக்கும்பகுதி என்பதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் போது முதலில் நான் எதிர் நோக்குவது 9'', 11'' விட்டம் கொண்ட நிலமட்டத்தில் காணப்படும் பௌத்த தூபியின் அழிபாடாகும். (படம்—1 B) சிதைந்த இத்தூபியின் அடித்தளத்தைத் தொல்லியல் துறையினர் புனரமைப்புச் செய்துள்ளனர். புனரமைப் பின்போது ஏற்கனவேஅடித்தளத்திலிருந்து பல கற்களோடு வேறு சில கற்களையும் சேர்த்து புனர்நிர்மாணம் கொள்ளப்பட்டதுஈண்டுகுறிப்பிடத்தக்கது பொதுவாக தூபியின் அங்கங்களான தளம் (Base), சுற்றுவட்டம் அல்லது புஷ்பபீடம் (Terrace), அண்டம் (Dome), கார்மிகா (Harmika), சத்திர (Parasol) ஆகியவற்றில் அடித்தளத்திற்கான சான்று மட்டுமேகாணப்படுவதால் இதற் மேல் புனர் நிர்மாண நடவடிக்கையில் ஈடுபடுவது தொல்லியல் மரபுகளுக்கு ஒவ்வாததொன்று:

### தாதுகோபுரத்தின் எச்சம்

இதிலிருந்து 86' தூரத்தில் முருகக்கற்களால் அமைக்கப்பட்ட மேட்டில் மேல் காட்சி தருவது பெரிய தாதுகோபுரத்தின் எச்சமாகும். (படம்—1 A) இதை இவ்வாறு உயரமான சதுரமான மேட்டில் அமைக்கும்போது இதற்கு முன்புள்ள ஏதாவது கட்டிடத்தை அழித்து அமைத்தார்களோ அல்லது தாராளமாக இப்பகுதியில் காணப்படும் முருகக்கற்களை மட்டும் கொண்டு அமைக்கப்பட்ட மேடையில்அமைத்தார்களோ என்று கூறுவது தற்போதைய நிலையில் மிகமிகக் கஷ்டமான காரியமாகும். இத்தூபி ஒரு சமயம் முருகக்கற்களாலான சதுரமான மேடையில்அமைந்திருந்தது என்பதை நாம் ஊகிக்கக்கூடியதாக இருக்கிறது. எவ்வாறாயினும் இவ்வாறு உயரமான இடத்தில் அமைத்ததன் நோக்கம் ஒரு சமயம் இலங்கைநேபக்கி வருவோருக்கு இத்தூபி ஒருவித பய பக்தி உணர்வை ஏற்படுத்தும் என்ற உணர்வுகூட அமைந்திருக்கலாம் எனக் கொண்டாலும்பிழையாகாது.

இத்தூபியின் அடித்தளம் நிலமட்டத்திலிருந்து 16' உயரத்தில் காணப்படுகிறது. அடித்தளத்தைச் சுற்றி வழக்கமாக ஸ்தூபிகளில் காணப்படுவது போன்று சுண்ணும்பினுல் பூசப்பட்ட வலம் வரும்பாதை (Procession Path) அமைந்திருந்தது என்பதை எடுத்துககாட்டும் விதத்தில் இதன் எச்சங்கள் அமைந்துள்ளன. அத்துடன்ஓரிடத்தில் மலர்வைத்து வழிபாடு நடத்துவதற்கான முருகைக்கல்லாலான மேடையும் காணப்படுகின்றது. இத்தகையதொரு மேடை வேறு திசைகளிலும இருந்திருக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் லூயிஸ் (Lewis) என்றஅறிஞர் 1909ம் ஆண்டில் வெளியிட்ட ஒரு கட்டுரையில் (''Notes on Delft'' by J. P. Lewis, in J. R. A. S. (C. B) No 62 Vol. XXI PP 341—360) கிழக்கிலும் மேற்கிலும் இத்தூபியை அடைவதற்கான படிக்கட்டுகளினுல் அமைக்கப்பட்ட வழி அமைந்தது பற்றிக் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. தற்போது இவையாவும் அழிந்துவிட்டன.

பொதுவாக இத்தூபியின் விட்டம் 36' யாகஇருக்கிறது. அடித்தளத்தை அடுத்தாற்போல் அலங்காரமாக வெட்டப்பட்ட முருகக்கற்களிலமைந்த புஷ்பபீடம் அல்லது சுற்றுவட்டம் காணப்படுகிறது. இச் சுற்றுவட்டங்களுக்கு பெருமளவுக்கு இருந்த பழைய கற்களோடு புதிய சற்களும் புனர் நிர்மாண வேலையின்போது சேர்க்கப்பட்டது. அண்மையில் இதற்கு மேலுள்ள அண்டத்தின் பகுதியைக் கட்டுவதற்கும் முயற்சிகள்மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. உண்மையில் அண்டத்தின் சிதைவுகளை தெளிவாக எடுத்துக் காட்டும் விதத்தில் எச்சங்கள் காணப்படாதவிடத்து இவ்வித நடவடிக்கை தொல்லியல் பாரம்பரியத்துக்கு முற்றும் முரணுன செயல் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அத்துடன் இலங்கையிலுள்ள தூபிகளின் தோற்றமும் பல வகையாக அமைந்திருந்தன. இவற்றில் மணி வடிவம் (Bell Shape) பானை வடிவம் (Pot Shape) குமிழி வடிவம் (Bubble Shape) வைக்கோல் பட்டடையின் தோற்றம், (Help of Pady Shape) தாமரைவடிவம் (Lotus Shape) ஆகியவை சிலவாகும்.

இவ்வாறு பலவித வடிவுகளில் தூபிகளில் அண்டங்கள் அமைக்கப்பட்டிருந்தபோது மிகமிக தெளிவாக அண்டத்தின் எச்சங்கள் காணப்படாத இடத்து இவ்வண்டப்பகுதி ஒரு குறிப்பிட்ட வடிவாக இருத்தல்வேண்டும். என எண்ணிப் புனர்நிர்மாணம் செய்வது வெறும் கற்பனையே. புனருத்தாரண வேலைகளில் தொல்லியலாளர் பொதுவாக கடைப்பிடிக்கும் மரபு யாதெனில் இருக்கும் எச்சங்களை மையமாகவைத்துப்புனர்நிர்மாணம் செய்வதேயன்றி இல்லாத ஒன்றைக் கற்பனைசெய்து நிர்மாணித்தல் அல்ல. இந்நிலையில் இத்தூபியின் அண்டப்பகுதியின் வடிவம் பற்றி நாம் வேறுவித சான்றுகள் மூலமும் அறியமுடியாதவிடத்து இப்பகுதியைப் புனருத்தாரணம் செய்தல் தொல்லியல் மரபிற்கு முற்றும் முரணுனது என்பது வெள்ளிடைமலை.

இப்பெரிய தூபியிலிருந்து 262' தூரத்தில் 13' விட்டமுள்ள இன்னெரு தூபியின் அடித்தளமும் சுற்றுவட்டமும் புனருத்தாரணம் செய்யப்பட்ட நிலையில் காணப்படுகிறது. (படம்—1C) ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இத்தூபியிலும் அண்டப்பகுதி பற்றிய தடயங்கள் இல்லாதவிடத்து அதைக்கட்டி எழுப்புதல் நிச்சயம் தவிர்க்கப்படல் வேண்டும்.

முன்பொருகால் இத்தூபியைச் சுற்றி வட்டவடிவிலமைந்த கொட்டகை ஒன்றும் அமைந்திருந்தது என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் கம்பங்களை நடுவதற்கான துளைகளைக்கொண்ட கற்களும் காணப்படுகின்றன. பொதுவாக ஆதிகாலத்தில் நிழலை அழிப்பதற்காகத் தூபிகளைச் சுற்றி வட்டவடிவினதாக கொட்டகை போடுதல் மரபாக இருந்தாலும்கூட பிற்பட்ட அனுராதபுரக்கலையில் (கி. பி, 6—கி. பி. 10 வரை உள்ள 'வட்டடாகே' அதாவது வட்டமாகக் கொட்டகை போடப்பட்டு அதனுள் அமைந்த தூபி போன்ற அமைப்போ இது என்று எண்ணத் தூண்டுசின்றது, இங்கு மட்டுமன்றி இத்தூபிகளை அடையும் பாதையோரங்களிலும் கம்பங்கள் நடுவதற்கான துளைகற்கள் காணப்படுவதை நோக்கும்போது இவை ஒரு சமயம் வணக்கத்துக்குரிய பௌத்த சிலைகளை உள்ளடக்கிய மண்டபங்களாகவும் இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய துளைகளைக்கொண்ட கற்கள் குடாநாட்டின் பௌத்த சின்னங்கள் இருக்கும் இடங்களில் காணப்படுவதும் இங்கே நினைவு கூரற்பாலது. லூவிஸ் தனது கட்டுரையில் குறிப்பிட்ட வண்ணம் வேறும் பல தூபிகள் இவ்விடத்தில் சிதைந்தநிலையில் இருந்தன என எண்ணத்தூண்டுகிறது. இத்தகையதொரு நிலை கந்தரோடையிலும் தூபிகளின் அடித்தளங்கள் துளைக்கற்கள் போன்ற சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. இருந்தும் இங்கேயும் அண்டத்தின் வடிவம் பற்றிய தெளிவான சான்றுகள் இல்லாதவிடத்து விரும்பியவாறு அண்டங்களைப் புதிய கற்கள் மூலம் புனர்நிர்மாணம் செய்தது ஒரு பாரதூரமான தொல்லியல் கொலை என்பது வெள்ளிடைமலை. வரலாற்று ஆசிரியர் கந்தரோடைப் பௌத்த சின்னங்களைப் பிற்பட்ட அனுராதபுரகாலத்தைச் சார்ந்தவை என்பர். அதே போன்றுதான் நெடுந்தீவுச் சின்னங்களும் இக்காலத்தின் இறுதிப்பகுதியில் அல்லது சற்றுப் பிந்திய காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கொண்டால் பிழையாகாது. இங்குள்ள கூரைஓடுகள், மட்பாண்ட ஓடுகளும் இதையே வலியுறுத்துகின்றன.

தொல்லியலாளர் தொல்லியல் எச்சங்களை மனித இனத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் எச்சங்களாகவே கருதுவது வழக்கு. இத்தகைய நோக்கில்தான் இன்றும் உலகின் பெரும்பாலான நாடுகளில் தொல்லியல் எச்சங்கள்பேணப்படுகின்றன. உதாரணமாக இன்று இஸ்லாமியர் வாழும் பிரதேசங்களான எகிப்து, ஈராக், பாகிஸ்தான் ஆகியன இன்று இந்நாட்டு மக்கள் பேணும் கலாச்சாரத்திற்கும் முற்றும் முரணுன பாரம்பரியத்தைப் படைத்த எகிப்திய சுமேரிய இந்துவெளிக் கலாச்சாரம் தழைத்த இடங்களாகும். இருந்தும் இந்நாடுகளில் தற்கால கலாச்சாரத்துடன் இவை தொடர்பற்றிருந்தும் கூடஇப்பிரதேசத்தின் கலாச்சாரப் பாரம்பரியம் என்ற நிலையிலேதான் இவைபேணிப் பாதுகாக்கப்படுகின்றன. ஏன் இலங்கையிலும்கூட பௌத்த சின்னங்கள் மலிந்து காணப்படும் அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் இந்துக்கோயில்களின் அழிபாடுகளும், சிறப்பு வாய்ந்த இந்துக் கடவுளரின் வெண்கலச் சிலைகளும் காணப்படுகின்றன. ஒருகாலத்தில் இப்பகுதியில் செல்வாக்குற்றிருந்த இந்து மதத்தின் அழிவற்ற எச்சங்களான இவை இம்மாவட்டத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் அழிவற்ற சின்னங்களாகும். இதை விடுத்து இச்சான்றுகள் மூலம் இந்து மதம் இங்கு தழைத்ததை மையமாக வைத்து, இந்துக்களை அங்கு கொண்டு சென்று குடியேற்றுவது இவற்றை அழிப்பதற்குச் சமமானதாகும்.

இதே போன்று பௌத்த சின்னங்கள், யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. இவை ஒருகாலப் பகுதியில் பௌத்தம் செல்வாக்குற்றுப் பின்பு சீரழிந்ததைக் கூறும் எச்சங்களாகும். இருந்தும் இவற்றை இம்மாவட்டங்களின் கலாச்சாரப் பாரம்பரியமாக வைத்துப் பாதுகாத்துப் பேணுதலே பொருத்தமானது. பௌத்தமும் இந்து மதம் போன்று பல மொழி பேசிய மக்கள் கடைப்பிடித்த மதம் என்பதும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

இலங்கையின் வரலாற்றை உற்று நோக்கும்போது இந்நாட்டின் வரலாற்றில் உதய காலத்தில் நிலவிய கலாச்சாரம் தென்னிந்தியக் கலாச்சாரத்தை ஒத்த ஒரு கலாச்சாரமாக இருந்தது என்பதைக் கந்தரோடை: அனுராதபுரம், திஸமகாராம, பொன்பரிப்பு, கதிரவெளி ஆகிய இடங்களில் கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன. சுருங்கக்கூறின் பௌத்தம் வரமுன்பு இங்கு நிலவிய கலாச்சாரம் தென்னிந்திய திராவிடக் கலாச்சாரத்தின் படர்க்கையே. பௌத்தத்தின் வருகையோடு வட இந்தியாவுக்கும் இலங்கைக்கும இடையில் தொடர்பு ஏற்பட்டாலும் கூடத் தென்னுட்டிற்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. ஏன் இந்நாட்டின் புத்தசிலைகளை ஆந்திர மாநிலக் கலைஞர்களால் அங்கிருந்து இங்கு கொண்டுவரப்பட்டன என்பதை பரணவித்தான போன்ற அறிஞர்களும் ஏற்றுள்ளனர். தமிழ்நாட்டில் பல்லவரின் ஆட்சியில் இங்கும் பௌத்த கலையில் திராவிடச் செல்வாக்குப் பரவியதும் வரலாறு. அத்துடன் தமிழ்நாட்டுப் பௌத்த ஸ்தலங்களாகிய காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், நாகபட்டினம் ஆகியவை சிறந்த பௌத்த தலங்களாகக் கிறிஸ்துவுக்கு முற்பட்ட பிற்பட்ட காலங்களில் விளங்கிய நேரத்தில் இலங்கைப் பௌத்த சங்கம் இவ்விடங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டது.

இத்தகைய நோக்கில் அணுகும்போது வரலாற்றுச் சின்னங்களைக் கலாச்சாரத்தின் பாரம்பரியமாகக் கருதவேண்டுமேயொழிய ஒரு குறிப்பிட்ட மககளுக்கு உரியதாகவோ அல்லது ஒருகுறிப்பிட்ட மக்கள் மட்டும் இவற்றின் மீது உரிமை கொண்டாடுவதோ மிகமிகத் துரதிர்ஷ்டவசமான செயல் மட்டுமன்றிச் சர்வதேசத் தொல்லியல் மரபுகளுக்கும் முற்றும் முரணுன செயலாகும்.

---

### சிறப்பாளராக 'மல்லிகை' ஜீவா

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தின் நெல்லை பாவட்டக்குழுவினர் நடத்தும் பேராசிரியர் நா. வானமாமலை நினைவாக இம்மாதம் 7ல் திருநெல்வேலி நகரத்தில் நடத்தும் ஆய்வரங்கில் சிறப்புரையாளராகக் கலந்துகொள்ளும் பொருட்டு 'மல்லிகை' ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா தமிழகம் சென்றுள்ளார்.

சமீபத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'தண்ணீர் தண்ணீர்' என்ற திரைப்படத்தின் கதைவசன கர்த்தாவான திரு. கோமல் சுவாமிநாதனும் இவ்விழாவில் சிறப்புரையாளராகக் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

திரு. டொமினிக் ஜீவா தமிழகத்தில் மதுரை, இராஜபாளையம், திருச்சி, சென்னை போன்ற பட்டினங்களிலும் இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்வார்.

வெளிநாட்டுப் பொருள்கள் வாங்க

# தீர்வையற்ற கடைகளில் இலங்கையர் நுழைவதானால்.

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள தீர்வையற்ற கடைகளில் இலங்கையர் பொருட்களை வாங்குவதற்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட இருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையர் இக்கடைகளில் பிரயாணக் காசோலைகளைக் கொண்டே இனிமேல் பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும்.

இக்கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்யத் தகுதியில்லாதவர்கள் இக்கடைகளுக்குள் செல்லவேண்டுமேயானால் 15 ரூபா கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

இக்கட்டுப்பாடுகள் மார்ச் மாதம் 1ம் திகதி அமுலுக்கு வருகின்றன. (இ)


## இதோ யாழ். மாவட்ட மக்களுக்கு ஒரு நற்செய்தி

**கார்த்திகை காய் கிலோ ரூபா 12/-**



வருடத்தில் நான்கே மாதங்களில் தோன்றி பூத்து காய்த்து மறைந்துவிடும் ஒரு கொடி கார்த்திகைப் பூ மலரினங்களிலேயே மகிமை வாய்ந்தது என பொருள்பட GLORIOSA (Glorious) தாவர இயலில் அழைப்பு சிறப்பைப் பெற்றது.

நியங்கலா என சிங்களத்தில் அனைவரும் அறிந்தது. இன்று கிராமிய உழைப்பாளிகளின் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஊட்டி மகிழ்விப்பது கார்த்திகைப் பூ!

இலங்கை எங்கும் மலையடிவாரங்கள், கடற்கரைப் பகுதிகள், அடர்ந்தவனங்களில் இன்று வண்ணமலராய் காட்சியளிப்பவை பூவின் மையத்தில் காணப்படும் இளம்பிஞ்சுகள், பூக்கள் வாடி மறையும்போது 3, 3½ அங். நீளமுடைய காய்களாக முதிர்ந்து வளர்ச்சி பெற்று இலை மறை காய்களாக பெருமளவில் கிடப்பவை.

காணும் கார்த்திகைப் பூ யாவுமே வளர்ச்சி பெற்ற காய்களாக பின் கொடியில் கிடப்பவையே. இக்காய்களை சேகரித்து நாடெங்கும் உள்ள எமது ஏஜெண்டுகளிடம் கிலோ ரூபா12க்கு பறித்த பச்சைக்காய்களையே விற்பனை செய்யலாம்.

சீசன் ஜனவரி தொடக்கம் பிப்,இறுதிவரை ஆகும். பிஞ்சை எக்காரணம் கொண்டும் பறிக்கக்கூடாது, இத்தகையகாய்களை சேகரம்செய்வது இலங்கையிலேயே முதன்மையானது என பெருமிதத்துடன் நாம் அறிவித்த உடன் சேகரம் செய்வோர் அனைவரும் 'மருத்துவ உலகிற்கு செய்யும் ஒரு சேவை' என்பதை உணர வேண்டுகிறோம்.

தவிர எப்படிப் பறிப்பது, பக்குவப்படுத்துவது, விற்பனை செய்வது போன்ற பல விபரங்களை இதனை சேகரம் செய்ய விரும்புவோர் உடனடியாக கீழ்க் கண்ட பாரத்தினை பூர்த்தி செய்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கார்த்திகைக் காய்களை தேடுவீர்! நலம் நாடுவீர்!!

To

**கதிரேசன் அன் கம்பெனி,**
**74, டாம் வீதி, கொழும்பு-12,**
தொலைபேசி: 36312

எங்கள் யாழ்மாவட்ட சேகரிப்பாளர்களாக:

**அண்ணா ஸ்தாபனத்தாரை**
நியமித்துள்ளோம்.

விலாசம்:

**அண்ணா கோப்பிக்கடை**
இல: 4, நவீனசந்தை, யாழ்ப்பாணம். போன்: 7413

**அண்ணா தொழிலகம்**
இணுவில், போன்: 7412.

அன்புடையீர்,

கார்த்திகைக்காய்களை இந்த சீசனில் சேகரித்து அனுப்பவிரும்புகிறோம். முழுவிபரம் தெரிவிக்கவும்.

பெயர்.........................................................

தபால் முகவரி ...............................................

.................................................................

.................................................................


# "கோரிக்கைகள் கிடைத்த பின்னரே வேலைக்கு திரும்புவர்"

## பரந்தனில் பாலாதம்பு

(பரந்தன்)

''பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன தொழிலாளர்களை நிர்வாகம் ஒரு மாதகாலம் கதவடைப்புச் செய்தது. அதற்கு பின்பு நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நவம்பர் 27ம் திகதி தொடங்கி வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது. இவ்வேலைநிறுத்தத்தில் தொழிலாளர்கள் சகல கோரிக்கைகளையும் வென்றெடுத்து வேலைக்குத் திரும்புவர். அரசும் அமைச்சர் சிறில் மத்தியூவும் தோல்வியடைவது நிச்சயம்''.

இவ்வாறு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. பாலா தம்பு பரந்தன் சந்தியில் நடைபெற்ற பகிரங்க கூட்டத்தில் கூறினர்.

திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

''அரசாங்கத்திற்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது. ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சி ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. தொழிலாளி வர்க்கம் மீண்டும் போராட்ட எழுச்சி பெறத் தொடங்கிவிட்டது. சமீபத்தில் கொழும்புத்துறை முகத்தில் யூ.என்.பி. தலைமையிலுள்ள ஜாதிக சேவக சங்க அங்கத்தவர்களே வேலைநிறுத்தத்தில் குதித்ததுமல்லாமல் தொழிற்சங்க காரியாலயமே தாக்கப்பட்டுள்ளது.

''வேலை நிறுத்தத்தை நீடித்து தொழிலாளர்களை கஷ்டத்துக்குள்ளாக்கி மீண்டும் வேலைக்குத் திரும்புவார்கள் என நிர்வாகம் பகற்கனவு காண்கின்றது. ஆனால் தொழிலாளர்கள் தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்த பின்பே வேலைக்குச் செல்லுவர்''.

லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் வடபிரதேசச் செயலாளர் திரு. எஸ்.விஜயானந்தன் பேசுகையில் கூறியதாவது:

''தொழிலாளி வர்க்கத்தின் நியாயமான போராட்டங்கள் தோல்வியுற்றதாக சரித்திரம் இல்லை. தாமதிக்கப்படலாம். இறுதி வெற்றி தொழிலாளர்களுக்கே. எந்தப் போராட்டத்திற்கும் கருங்காலிகள் இருக்கவே செய்வர். பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையிலும் சில கருங்காலிகள் இருப்பது அதிசயமல்ல. தொழிலாளி வர்க்கம் ஐக்கியப்பட்டு மன வுறுதியுடன் செயல்பட்டால் வெற்றி எமதே''.

சமாதான நீதவான் திரு. எஸ்.ஞானப்பிரகாசம் உட்பட பலர் உரையாற்றினர். (க)

# "இலவச பாடநூல் விநியோகத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும்"

(யாழ்ப்பாணம்)

''இலவசக் கல்வியின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மாணவர்கள் அனைவருக்கும் இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கி அவர்களைக் கல்வியில் மேம்படச் செய்வதற்காக மாணவர்கள் எமது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு நன்றி செலுத்த வேண்டும்.''

இவ்வாறு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற இலவச பாடப் புத்தகங்கள் வழங்கிய ஆண்டு விழாவில் மேற்படி கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பேசிய திரு. ஆ. சி. கணேசவேல் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. பொ. நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு கணேசவேல் தொடர்ந்து பேசியதாவது, ''முற்காலத்தில் கல்வி என்பது பணம் படைத்தவர்களுக்கும் உயர் சாதியினருக்குமே ஏக சொத்தாக இருந்தது. இந்த அநியாயத்தை காலம் சென்ற சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா நீக்கி இலவசக் கல்விப் போதனையை ஆரம்பித்து எத்தனையோ ஏழை சிறுவர்களை கல்விமான்களாக வருவதற்கு உதவினார்.

இவரின் கொள்கையை பூரணப்படுத்தும் வகையில் எமது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எடுத்த பல முயற்சிகளில் இலவசப் பாடப்புத்தக விநியோகமும் ஒன்றாகும்.

எத்தனையோ சிறுவர்கள் பாடப்புத்தகங்கள் வாங்குவதற்கு வழியில்லாமல் தமது வாழ்க்கையை பாழாக்கியுள்ளார்கள். இப்படியான சிறுவர்களை கல்விமான்களாக மாற்றுவதற்கு இத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இம் முயற்சியின் பயனாக எமது வருங்காலச் சந்ததி கல்வி அறிவு பெற்றவர்களாக வருவார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஆசிரியர் திரு. சிறீதயாளன் மற்றும் பலர் பேசினார்கள். (க)

# ஆசிரியர் பற்றாக்குறை

(பண்டத்தரிப்பு)

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவிடம் முறையிட்டுள்ளது.

10 ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டிய இந்த வித்தியாலயத்தில் தற்போது இரு ஆசிரியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருவதாகவும் ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவரின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வட்டு. எம். பி. க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரணர்களுக்கான இரண்டுநாள் பயிற்சி

(கோண்டாவில்)

சாரண ஆசிரியர்களுக்கான இரண்டுநாள் பயிற்சி வகுப்பு யாழ். மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தினால்கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் சுமார் முப்பது சாரண ஆசிரியர்கள்வரையில் பங்குபற்றினர்.

பயிற்சி வகுப்புகளை பயிற்சி ஆணையாளர் திரு. என். நல்லையா, உதவிப் பயிற்சி ஆணையாளர் திருமதி சி. கணபதிப்பிள்ளை, உதவி மாவட்ட ஆணையாளர் (நிர்வாகம்), தவகோபால் உதவி மாவட்ட ஆணையாளர் [திரிசாரணர்) சச்சிதானந்தம் ஆகியோர் இவர்களுக்கான பயிற்சிவகுப்புகளை நடாத்தினர்கள்.

# கூட்டு வழிபாடு சிறந்தது

(சாவகச்சேரி)

''கூட்டுவழிபாட்டைச் சிறப்பாக நடத்த இறைபக்தி, அன்பு வேண்டும் அன்பேசிவம் அச்சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடும் சமயம் இந்து சமயம்''

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய ஆண்டுவிழாவில் உரையாற்றிய சிறப்புச் சொற்பொழிவாளர் சிவஞானச்செல்வி வசந்தா வைத்தியநாதன் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்,

சரசாலை இளைஞர் மன்றப் போஷகர் ச. நமசிவாயம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் செல்வி வசந்தா வைத்தியநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது, ''இறைவனைப் பிரார்த்தனை செய்ய மனதை ஒரு வழிப்படுத்திவழிபடவேண்டும் அதற்கு கூட்டு வழிபாடே சிறந்தது. இதில்பங்கு கொள்ளும் அனைவரும் பூரணமான இறைபக்தியுடன் பிரார்த்தனை செய்தால் இறைவன் உள் நின்று அருள்புரிவான். (ஊ)

# "கல்விக்கு ஒதுக்கிய பணம் முழுமையாகப்பயன்பட வேண்டும்"

(புலோலி - சரவெட்டி)

''இலவசக் கல்வி இந் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட காலம் தொடக்கம் பூரணத்துவம் பெறாத கல்வியாக இருப்பதைக் கண்ட அரசாங்கம் மாணவருக்கு இலவசப் பாட நூல்களை வழங்க முன் வந்துள்ளது. ஜனாதிபதியின் உள்ளத்தில் இந்த எண்ணம்1943ம் ஆண்டிலேயே உருவாகி இருந்த போதிலும் அவர் ஜனாதிபதியாக வந்த பின்னரே இதைச் செயலில் காட்டக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.''

இவ்வாறு யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இலவச பாடப்புத்தகம் வழங்கப்படும் இரண்டாவது ஆண்டு விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

''அரசாங்கம் லட்சக்கனக்கான பணத்தைக் கல்விக்கென ஒதுக்கியிருப்பதால் அப் பணம் முழுமையாகப் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது, இவ்வித இலவசக் கல்வி மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளைப் பெற மாணவர் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்'' என்றும் திரு. சபாநாயகம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு. மு. பொ. வீரவாகு பேசுகையில், ''ஆசிரியர்கள் தங்கள் ஒரு நாள் சம்பளத்தையும் மாணவர்கள் ஒரு வேளை உணவுப் பணத்தையும் செலுத்தி உடைந்து போயிருக்கும் தளபாடங்களுக்குப்பதிலாக புதிய தளபாடங்களை வாங்க உதவ வேண்டும்'' என்று கூறினர்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்துவும் பேசினர். கல்லூரி அதிபர் செல்வி ஆர். ஜே. மான் நன்றி தெரிவித்துப்பேசினர். (அ)

# மணிக்கோபுரம் அமைக்கப்படும்

(பண்டத்தரிப்பு)

சங்கானை இந்து இளைஞர் மன்றம் சங்கானை சிலம்புப் புளியடி வைரவர் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் ஒன்றை அமைத்துக்கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்கான நிதிசேகரிக்கும் பணியில் மேற்படி மன்றத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.

கடைசி வாரம்
8 வது-மகத்தான வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெலிங்டன் மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
பட்டாக்கத்தி
பைரவன்

Regal Cinema (Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
OPeration Day Break
12 - 2 - 82 முதல்
தணீரும்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்னும் 4 தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

ஸ்ரீதர் இன்று மட்டும்
யாழ். நகர் தினசரி: 10.30, 2.30, 6.15, 9.30
கமலஹாசன் — ஸ்ரீபிரியா
சட்டம் என் கையில்
(புதிய பிரதி)
4—2—82 முதல்
பட்டிக்காடா பட்டணமா

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
138 வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
அநேகரின் வேண்டுதலுக்காக சில தினங்கள் மட்டும்!

4—2—82 வரை மட்டும்
ராஜா (யாழ். நகர்) சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

WINDSOR (JAFFNA) Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
Starring: Alain Delon, George Kennedy, Susan Blakely
இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண்திரையில் காண்க.


# யாழ். மாவட்ட மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை

(கரவெட்டி)

வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் சமய, சமூக, கலாசார நிகழ்ச்சிகளை யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கொண்டாடுவதற்காகப் பிரதம கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் வட்டாரக் கல்வி அதிகாரிகளைக் கொண்ட பல்வேறு குழுக்களை அமைத்துள்ளார்.

இக்குழுக்கள் எவ்வித நிகழ்ச்சிகளைக் கொண்டாட வேண்டுமென்பது பற்றித் திட்டங்கள் உருவாக்கி கல்வி அதிபதிக்குச் சமர்ப்பிக்கும். இந் நிகழ்ச்சிகளில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த சமயாசாரியர், புகழ்பெற்ற தலைவர்கள், சமூகத் தொண்டர்கள் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களும் இடம் பெறும்.

குழுக்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அச்சிடப்பட்ட நாட்காட்டிகளை கல்வி அதிபதி பாடசாலைகளுக்கு விநியோகிப்பார். இந் நாட்காட்டிகளில் கொண்டாடப்பட வேண்டிய விழாக்கள் குறிப்பிடப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாணவரிடையே ஒரு தேசிய விழி புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் இம் முயற்சி யாழ்ப்பாண வரலாற்றிலேயே முதலாவதாகக் கொள்ளலாம். [அ]

# இன்றைய பலன்

தை மாதம் 21 ம் திகதி
புதன்கிழமை
(3—2—82)

மேடம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்துஉந்தும். ஏமாறறம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

கடகம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். எதிலும் ஏமாற்றம் தென்படும். அரசபயத்துக்கு இடமுண்டு. எதிலும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் இருக்கவும்.

மிதுனம்: இதயப்படுதாவில் இன்பக்கூத்து, வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

கடகம்: ஆபத்து மிகவும் உண்டு. அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர் எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று.

சிங்கம்: தன்மான வாழ்வுடன் தனமும் சேரும். தாயின் ஆதரவும் தாராளமாக கிடைக்கும். முயற்சி செய்தால் முன்னேற்றற முண்டு.

கன்னி: நீண்டநாள் கனவு இன்று நனவாகும் தொழில் வேட்டையில் இன்று வெற்றி கிடைக்கலாம். அரசாங்க ஊழியர்களாயின் பதவி உயர்வு நடவடிக்கை எடுக்கப்படும் வீட்டிலும் அமைதிஉண்டு.

துலாம்: பணம் பலவழிகளிலும் செலவாகும் அன்னிய நபரொருவரால் ஏமாற்றம் அடையக் கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர் பிரயாணத்தின் போது பொருள்நழுவக்கூடும். நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்கு சிறந்த பலனை அழிக்கும். களஸ்திரவழியாலும் நன்மைகள் சேருவதற்கு இடமுண்டு. வரவேற்க வேண்டிய தினம்.

தனு: பேச்சு வார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது நன்று. அவசர விரோதத்தின் மூலம் ஆபத்தை தேடிக்கொள்வீர்கள். துதி பாடிக்கொண்டே சிலர்துரோக செயலில் ஈடுபடுவார்கள்.

மகரம்: இன்று முன்னணியில் நிற்பீர்கள் நல்லதீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வ சிந்தை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றிகிடைக்கும். இலட்சிய வாதிகளுக்கு இன்று பொன்னான தினம்.

கும்பம்: தொழில்துறையில் நல்லவருமானம் கிடைக்கும். வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு, புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

மீனம்: முயற்சியின் மூலம் முதலிடத்தை பிடித்துக்கொள்வீர்கள். பலவழிகளிலும் பணம் கைக்குவந்து சேரும். உற்சாகமளிக்கும் செய்தியொன்றுகிடைக்கலாம். வியக்கத்தக்க சாதனையொன்று நிலைநாட்டப்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வவனியா மாவட்டம்

# அபிவிருத்திசபைக் கூட்டத்தில் ஒலித்தது.....

[நமது வவனியா நிருபர்]

வவனியா மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டத்தில் இடம் பெற்ற விவாதங்களின் போது கேட்டவை:—

வை. சிற்றம்பலம்: கூட்டக் குறிப்பில் முக்கிய விஷயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

டாக்டர் வ. பரராஜசிங்கம்: கட்டிட, விவசாய திணைக்களங்களில் சிற்றூழியர்களாக வேலை செய்பவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். சகாய வேலையின்போது நடைபெறும் ஊழல்கள் தடுக்கப்பட வேண்டும்.

தலைவர்: எம். சிற்றம்பலம்: தொழில்வாய்ப்பு சம்பந்தமான அதிகாரம் இந்த சபைக்கு இருந்தபோதும், மாவட்ட அமைச்சருக்கு மட்டும் தொழில் விடயமாய் கடிதம் வந்திருக்கிறது.

நீர்பாசன பொறியியலாளர், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி, கமத்தொழில் உதவி ஆணையாளர் ஆகியோரை இச் சபைக்கு அழைத்திருந்தோம். ஆனால் கமத்தொழில் உதவி ஆணையாளர் மட்டுமே வந்திருக்கின்றார். மற்றைய இரு அரசாங்க அதிகாரிகளும் வராதது பற்றி உரிய நடவடிக்கையை செயலாளர் எடுக்கவேண்டும்.

டாக்டர் வ. பரராஜசிங்கம்: வவனியா கடைகளில் விற்கப்படும் பொருள்கள் நிறை குறைவாக இருக்கியது.

தலைவர்: எம். சிற்றம்பலம்: இராணுவ தாக்குதல் குறித்து வன்மையாக கண்டிக்க வேண்டும்.

டாக்டர் வ. பரராஜசிங்கம்: மக்களைக் காப்பாற்றவேண்டியவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவது வருந்தத்தக்கது. நாமும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தலைவர் எம், சிற்றம்பலம்: பாரம் கூடிய வாகனங்கள் பழுதடைந்த வீதிகளால் செல்லாமல் தடுப்பதற்கு மாவட்ட அபிவிருத்திசபை செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

வை. சிற்றம்பலம்: பொது வைபவங்களில் தேசிய கொடியுடன், மாவட்ட கொடியும் ஏற்றவேண்டும்.

## வெடிச்சத்தம்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டிற்கும் இடைத்தூரம். — சுமார் 50 யார்.

சட்: நீர் தம்பிப்பிள்ளை வீட்டை அடையு முன்னர் நாராயணசாமி வீட்டில் வெடிச்சத்தம் கேட்டது. ஆம்.

சட்: முதலாவது வெடிச்சத்தம் ரோகிணி அம்மா வீட்டில் கேட்டதற்கும் பின்பு நாராயணசாமி வீட்டில் கேட்ட வெடிச்சத்தத்திற்கும் இடையில் நேரமெவ்வளவு இருக்கும்? — 1 நிமிடம் வரை.

சட்: ரோகிணி அம்மா வீட்டிற்கும் நாராயணசாமி வீட்டிற்கும் இடைத்தூரமெவ்வளவு? — 25 யார் வரை.

சட்: சம்பவத்தன்று ரோகிணி அம்மா வீட்டில் நீர் கண்ட மூவரையும் தவிர வேறு ஒருவரையும் காணவில்லை. — ஆம்.

சட்: அம் மூவரில் இன்று ஒருவரும் மன்றில் இல்லை — ஆம்.

4ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. முத்துக்குமாரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: நீர் அன்று கொட்டில் வாசலில் படுத்திருந்தீர்? வாசலில் படுக்கவில்லை. வாங்கில் படுத்திருந்தேன்.

சட்: வாங்கு கொட்டிலினுள் இருந்தது? ஆம்.

சட்; நீர் படுத்திருந்ததிலிருந்து எவ்வளவு தூரத்தில் கருணேஸ்வரன் படுத்திருந்தார்? 2 யார் தூரத்தில்,

சட்: நீர் கண்டபோது சந்தேகநபர்கள் கருணேஸ்வரனுக்கு எந்தப்பக்கத்தில் நின்றூர்கள்? கால்மாட்டில்.

சட்: அப்படிச் சந்தேகநபர்கள் நின்றது நீர் படுத்திருந்த வாங்கிலிலிருந்து எவ்வளவு தூரத்தில்) ஒன்று ஒன்றரை யார் வரை.

சட்: அந்த நேரத்தில் இலாம்பு தூக்கப்பட்டிருந்ததா? ஞாபகமில்லை.

சட்: சந்தேகநபர்கள் உமக்குமிககிட்டவாக நின்றூர்கள்? ஆம.

சட்: எனவே உம்மைக் காணக்கூடிய நிலையில் இருந்தார்கள்? ஆம்.

7ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். சிவானந்தன் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததால் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## கொக்குவில் புதிய மருந்தக கட்டிடம்

(கோண்டாவில்)

கொக்குவில் புதிய மருந்தகக் கட்டிடம் யாழ், மாவட்ட கொக்குவில்உபபணிமனை அலுவலகத்திற்கும் நூலகத்திற்கும் இடையில் அமைந்திருப்பதினுல் மருந்தகத்திற்குவருகின்ற நோயாளர்கள் மருந்தகம் எதுவென்று தெரியாது தடுமாறுகின்றூர்கள். இதற்கு காரணம் மருந்தகம் என்று பெயர் பலகை இல்லாமையும் உள்ள பலகையும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு சுமார் இருபத்தைந்தடி உயரத்தில் தூக்கிவிடப்பட்டுள்ளமையுமே ஆகும்.

இடம் மாறியவிடயம் தெரியாத சில நோயாளர் பழைய இடத்திற்கு சென்றுகால்கடுக்க நின்றுவிட்டு வீட்டிற்கே செல்கின்றூர்கள். அவ்விடத்திலும் இடம்மாற்றப்பட்டுள்ள அறிவித்தல் எதுவும் வைக்கப்படவில்லை. இதனுல் படிப்பறிவற்ற மக்கள் பெரும் சிரமத்திற்கு நாளாந்தம் உள்ளாகின்றூர்கள்.

# வரி விளம்பரம்

### தேவை

பெனியன் கம்பனிக்கு அனுபவம்வாய்ந்த மெக்கானிக், பெனியன்மெசின் ஓட, தையல் தெரிந்த கட்டிங்தெரிந்த ஆட்கள் தேவை. (ஆண், பெண்) கீழ்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும். சந்திரா பெனியன் தொழிற்சாலை, 46/1 பிறவுண்ரோட், 4ம், ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2160

---

தமிழ் — ஆங்கில தட்டச்சு எழுதுவினைஞர் உடனே தேவை. ஊக்கமுள்ள ஆங்கில அறிவுள்ள இளைஞர் விரும்பத்தக்கது. இல: 257 மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 2159

---

நவீன முறையில் அமையப்பெற்ற சைவ ஹோட்டலுக்கு சகல ஊழியர்களும் தேவை. 8—2—82க்கு முன் நேரில் சமுகம் அளிக்கவும். ஸ்ரீ அம்பாள் சைவ ஹோட்டல் அன்ட் பேக்கரி, ஸ்டேசன் வீதி, மாங்குளம். 2137

---

எமது தொழிற்சாலைக்கு ஆண், பெண் உதவியாளர்கள் தேவை. நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றியல் வேக்ஸ், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (2152)

---

திருநெல்வேலி சிவன் வீதியில் உள்ள ஞானக்குழந்தை இல்லம் பாலர்பாடசாலைக்கு ஆசிரியை தேவை. விரும்புவோர் நற்சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். பாலர் கல்விக்கழகம், 49/5, யாழ்ரோட், யாழ்ப்பாணம். (2173)

### பயிற்சி

எந்த நாட்டிலும் இலகுவான முறையில் பெண்கள் வேலை வாய்ப்பைப் பெற மின்னியல் ''தையல் பயிற்சி''யும் யூக்கி மெசின் பயிற்சியும் ஆரம்பம்: 2—2—82 பயிற்சிக்காலம் ஒரு மாதம் நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2135

---

சினிமா ஒப்பறேற்றர் (Operator)வேலை பழக விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். மிகக் கெதியில் நல்லமுறையில் பழக்கிக் கொடுக்கப்படும். மனேச்சர், லிபேட்டி சினிமா, அச்சுவேலி. 2136

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## 1982 ஆம் வருடத்திற்கான சோலைவரி மதிப்பேடுகள்

1982 ஆம் வருடத்திற்கான மாநகராட்சி மன்ற சோலைவரி மதிப்பேடுகள் தற்பொழுது ஆயத்தமாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் (சோலைவரிக் கிளையில்) அலுவலக நேரத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாக (252 ஆம் அத்தியாயமான) மாநகராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் 235 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சி.வி.கே. சிவஞானம்'
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1.2.82. 2166

### விற்பனைக்கு

மொடல் M 2438 K ரக புதிய சன்யோ ஒலிப்பதிவு வானொலி (Radio Cassette Recorder) இரண்டு ஸ்பீக்கர் அமைப்பு முறை, 4.5 வோல்ட் சக்தி கொண்டது. தொடர்பு கொள்க: 134, பிறவுண்வீதி நீராவியடி. (2172)

---

மானிப்பாயில் 9பரப்புகாணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மேதர், 195, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2162

---

இரண்டுதிண்டுக்கல்இரும்புப் பெட்டி 2½ அடி, 2 அடி அளவுள்ளது. உடன் பார்வையிடவும். பான்ஸி நகைக்கடை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2154)

நல்ல நிலைமையிலுள்ள F. N. Morris Minnor உடன் விற்பனைக்குண்டு. திருமதி அ, அருளானந்தம், 27, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம் (2169)

### வகுப்புகள்

J E C யின் வகுப்புகள் அனைத்தும் 33, பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டடத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை, விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம். 2164

---

### யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சைத் தராதரப்பத்திரங்கள்

1974ம் ஆண்டில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மேற்படி சகல பயிற்சிநெறிகளுக்குமான இறுதிப் பரீட்சைத் தராதரப் பத்திரங்கள் பரீட்சை ஆணையாளரிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

இப்பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் தங்களது மாணவப்பிரவேச அனுமதிச்சீட்டுடன் அலுவலக நேரத்தில் வந்து இந்நிறுவனப் பதிவாளரிடம் அவற்றினைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

சி. இராசேந்திரா,
அதிபர்.

பல்தொழில்நுட்ப நிறுவனம்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
26.01.1982. 2110

---

### பழைய மாணவர் வெற்றி

(அரியாலை)

யாழ்.பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர் தினத்தையொட்டி கல்லூரி மைதானத்தில் பழைய மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பழைய மாணவர் கோஷ்டி 4—2 கோல்களால் வெற்றியீட்டியது.

பழைய மாணவர் கோஷ்டிக்கு திரு. விஷயரத்தினமும், கல்லூரி மாணவர் கோஷ்டிக்கு செல்வன் விஷயராகவனும் தலைமை தாங்கினர். போட்டிக்கு திரு. என். எஸ். தனபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

## தொழில்நுட்ப துறைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில், மோட்டார் பொறியியல், மின் இணைப்பு, உடைதைத்தல் ஆகியதொழில்நுட்ப துறைகளில் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க, கல்வி இலாகாதீர்மானித்துள்ளது. கடந்தவருடம் இக்கல்லூரியில் தொழில்நுட்ப துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு விரைவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இவ்வருடம் மார்ச்மாதம் 1ம் திகதி பயிற்சிவகுப்புக்கள் ஆரம்பமாகவிருக்கின்றது. இப்பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் பெப்ரவரி மாதம் 19ம் திகதிக்கு முன்னர் கல்லூரி அதிபரிடம் பெயர்களை பதிவுசெய்யுமாறு வேண்டப்படுகின்றனர். (க)

## யாழ். செயலகத்தில் சுதந்திரதினம்: தேசியக் கொடியும் நந்திக் கொடியும் ஏற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி யாழ். செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, தேசியக் கொடியையும், யாழ் மாவட்ட அபிவிருத்திசபையின் நந்திக் கொடியையும் ஏற்றி வைப்பார்.

தேசியக்கொடி ஏற்றும் பொழுது தேசிய கீதம் இசைக்கப்படும்.

அன்றையதினம் யாழ் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் இவ்விரு கொடிகளும் ஏற்றிவைக்கப்படவுள்ளது. (மா—வெ)

## இன்று சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. சு, சண்முகராசா இன்று காலை யாழ். மேல்நீதி மன்ற நீதிபதி ஜனப் எம். ஜமீல் முன்னிலையில் சமாதான நீதவானகச் சத்தியப்பிரமாணம்செய்கின்றார். இவர் யாழ்ப்பாணப் பகுதிக்குச் சமாதான நீதவானக நீதிஅமைச்சரினல் நியமிக்கப்பட்டுள்ளார்.


ஆங்கில வைத்தியசாலை

திறப்பு விழா

ஆனைக்கோட்டை மற்றும் சூழவுள்ள பகுதி மக்களின் நன்மை கருதி ஆனைக்கோட்டைச் சந்தியில் நிறுவப்பட்டுள்ள
ஆங்கில வைத்தியசாலையை
இன்று (3-2-82) புதன்கிழமை
காலை 10-30 மணிக்கு
யாழ். அரசாங்க அதிபர்
திரு. தேவநேசன் நேசையா அவர்கள்
திறந்துவைக்கின்றார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
டாக்டர் K கோபாலகிருஷ்ணன் M B B S. அவர்கள் வைத்தியசேவையாற்றுவார்கள்.

டாக்டர் பரிபூரணனந்தா சண்முகநாதன்.
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (2170)



கிளிநொச்சி அக்கிரிக்கொலா இஞ்ஜினியர்ஸ் (ஸ்ரீகராச்)

கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு அண்மையில் அமைந்திருக்கும்
அக்கிரிக்கொலா இஞ்ஜினியேர்ஸ் (ஸ்ரீகராச்)
என்னும் ஸ்தாபனத்தில்
உழவு இயந்திரம திருத்தி அமைக்கும் பகுதி
கொமிஷன் அடிப்படையில்
கொடுப்பதற்கு உண்டு.
மர்சி பெகுசன் (M. F) போர்ட் (FORD)
ஆகியவற்றில் திறமைமிக்கவர்கள் எவரும் விண்ணப்பிக்கலாம்.
கடித மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளவும்.
ஸ்ரீ [illegible]
அக்கிரிக்கொலா இன்ஜினியேர்ஸ்,
கிளிநொச்சி. (2165)


## பொது....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பைப் பெறக்கூடிய நிலையிலிருந்தே தலைமைஎழுவதாகும் என்று ஹெலன் ஜென்னிங்ஸ் கூறுகின்றார். பொதுவாக எல்லோரும் தலைவர்களாக முடியாது. தலைவனின் அறப்பண்புகளாவன நேர்மை வாய்மை பிறர் நம்பிக்கை வைக்கக்கூடிய நடத்தை துணிவு, தற்பெருமையின்மை பிறர் நலனில் அக்கறை.

தலைமையில் பல வகைகள் உண்டு. இதனை திரு. எஸ். சந்தானம் பின்வருமாறு வலியுறுத்துகின்றார். தம் தொழில்நுட்ப அறிவினாலும் திறமையினாலும் சிலர் தலைமைப்பதவி பெறுகின்றனர். இதை அறிவுத் தலைமை எனவும், சொல்வன்மை ஆகியவற்றால் ஏற்படும் தலைமைக்கு 'அபிமானத் தலைமை' என்வும், தன்னிச்சைத் தலைமைகளும் இடம் பெறுகின்றது. தன்னிச்சைத் தலைவர்கள் பிறரை வெருட்டி ஆதிக்கத்தை செலுத்தி தம் நிலையை பாதுகாத்துக்கொள்கின்றனர்; அது எப்படியாயினும் இவர்கள் யாபேரும் பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களே. ஆகையினால் இவர்களுக்கு தூய்மை வேண்டும். அது மட்டும் போதுமா? பின் செல்பவர்களை வழிநடாத்துவதற்குரிய தெளிவான கருத்துக்களும் வேண்டும். இதனையே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.


விவசாயிகளுக்கு விசேட கடன் வசதி

1. எம்முடன் பண முதலீடு செய்யும் விவசாயிகளுக்கு அதிக வட்டி கொடுப்பதுடன் குறுகிய காலக் கடன் வசதி நியாயமான வட்டியில் வழங்கப்படும்.
2. முதலீட்டுப்பணத்தில் ஒரு பகுதியைத் தேவையேற்படும்போது கடனகப் பெற்றுக்கொள்ளலாம்.
3. உங்கள பெரும்போக வருமானத்தில் ஒரு பகுதியை உடனடியாக முதலீடு செய்து தேவையான காலத்தில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

எமது ஸ்தாபனத்தின் 25 வருட உறுதிமிகு சேவையின் பயனக
இந்தப் புதிய திட்டம் முதன் முதலாக யாழ்ப்பாணப்பகுதியில் செயற்படுத்தப்படுகின்றது.
இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
எமது ஸ்தாபனத்தின் பொருளாதார நிலை பற்றிய தகவல், கடன் வசதி பற்றிய விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:—

த சென்றல் பினன்ஸ்
கொம்பனி லிமிட்டெட்,
250, கே. கே. எஸ். வீதி, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி 8360

| தலைமை அலுவலகம் | கிளை அலுவலகம் |
|---|---|
| 24, தலாதாவீதி, | 221/5, தர்மபாலமாவத்த, |
| கண்டி. | கொழும்பு. |
| தொலைபேசி: 4098 | தொலைபேசி: 93792 |

## திருக்கேதீஸ்வரஆலயசூழலில் கத்தோலிக்க தேவாலயம் அமைக்கும் முயற்சி

# எதிர்ப்புத் தெரிவித்து 12

## சைவக் கழகங்கள் ஜனதிபதிக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு அண்மையில் கத்தோலிக்க திருச்சபைத் தேவாலயம் கட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பன்னிரண்டு சைவக்கழகங்கள் ஜனதிபதிக்கு அவசரத் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளன.

பன்னிரண்டு சைவநிறுவனங்களின் சார்பில் 15 பேர் இத் தந்தியை கைச்சாத்திட்டு அனுப்பியுள்ளனர்.

அகில இலங்கை இந்துசங்கத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதனுக்கும் யாழ் மறைமாவட்டஆயர் டாக்டர் எமிலியானுஸ்பிள்ளைக்குமிடையே இந்த விவகாரம் தொடர்பாக 1964ம் ஆண்டு தைமாதம் 30ம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறி திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு அண்மையில் கத்தோலிக்க தேவாலயம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அத் தந்தியில் தெரிவிக்சப்பட்டுள்ளது.

இதுதொடர்பான தீர்மானமொன்று நல்லை ஞானசம்பந்த ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரியசுவாமிகள் தலைமையில் எட்டு இந்து ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்திலும் நிறைவேற்றப்பட்டது.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு ஒருமைல் சுற்றுடலுக்குள் வேறெந்த மதத்தினதும் ஊடுருவல் இருக்கக்கூடாது என்பதும் ஏற்கனவே வைக்கட்பட்டிருந்த லூர்து மாதா சிலை தொடர்ந்து இருந்தாலும் அதனை எவ்வகையிலும் விஸ்தரிக்சக்கூடாது என்பதும் முன்னைய ஒப்பந்தத்தின் சாராம்சமாகும்.

தற்போது முடிக்குரிய பிரதேசமான குறிப்பிட்ட ஒருமைல் சுற்றுடலுக்குள் வேற்றுமத மக்கள் குடியேற்றப்படுவதோடு லூர்து மாதா சிலை வைக்கப்பட்ட இடத்தில் கத்தோலிக்கதேவாலயம் ஒன்றை அமைக்கும்முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் இந்துமத நிறுவனங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலக இந்துமகாசபையின் (விஸ்வஹிந்து பரீஷத்) இலங்கைக்கிளை, சைவபரிபாலன சபை, சைவவித்திய விருத்திச்சங்கம், பரமேஸ்வரா தர்மகர்த்தாசபை, அகிலஇலங்கை சைவமகாசபை, சைவநெறி தொண்டர்கழகம், கரச்சி சைவவித்திய விருத்திச்சங்கம், அருள்நெறித் திருக் கூட்டம் ஆகிய 8 இந்துமத ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தற்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டுள்ள தேவாலயத்தின் எல்லையும், திருக்கேதீஸ்வர சுவாமி தீர்த்தமாடும் புனித பாலாவியின் எல்லையும் ஒன்ருக இருப்பதால் பாலாவியின் புனிதத்தன்மை இதனுல் கெட்டுவிடும் என்றும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

1950ம் ஆண்டு இச்சிலை இவ்விடத்தில் நிறுவப்பட்டபோது இந்துப்பிரமுகர்கள் இதனை ஆட்சேபித்தனர். இதனுல் அப்போது பதவியிலிருந்த மன்னுர்உதவிஅரசாங்கஅதிபர் சிலையை எடுத்துவிடவேண்டுமெனக கூறினுராயினும் சிலை ஏற்கனவே வைக்கப்பட்டுவிட்டதால்அதனை அனுமதிக்குமாறும் தொடர்ந்து அதனை எவ்வகையிலும் விஸ்தரிப்பதில்லையென்றும் கத்தோலிக்க குருமார் உறுதிஅளித்திருந்தனர். இதற்கமைய ஒப்பந்தமொன்றும் உருவாக்கப்பட்டது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜனதிபதியையும், இந்து கலாச்சார அமைச்சர், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரையும் சந்தித்து இது பற்றி முறைப்பாடுசெய்வதற்கான குழுவொன்றும் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

மாந்தைச்சந்தியிலும் அதன் சுற்றுடலிலும் கத்தோலிக்க, கிறிஸ்தவ திருச்சபைக்குக் காணி கொடுக்கக்கூடாதெனவும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி திரு. எஸ். ஆர். கனகநாயகம் (தலைவர்: இந்து வித்தியா விருத்திச்சங்கம், பரமேஸ்வரா நம்பிக்கை சொத்து பொறுப்பாளர்சபை) திரு எஸ். செல்வராசா (தலைவர்சைவபரிபாலனசபை) திரு. யோகேந்திரா துரைசுவாமி (தலைவர் அகில உலக இந்து மகாசபை விஷ்வ ஹிந்து பரிஷத் இலங்கைக்கிளை), திரு. ஆர். என். சிவப்பிரகாசம் (தலைவர் அகில இலங்கை சைவமகாசபை), திரு. எச். ரி. சோமசுந்தரம் (தலைவர் அகில இலங்கை சேக்கிழார் மன்றம், நாவலர் தருமபாதுகாப்பு சபை), திரு. எஸ். பரநிருபசிங்கம் (தலைவர் சைவ அபிவிருத்திசபை நாயன்மார்கட்டு திரு. வி. கதிரவேலு (தலைவர் கரச்சி இந்து வித்தியா விருத்தி சங்கம்), திரு. எஸ். கே. வேலாயுதபிள்ளை (பொதுமுகாமையாளர், காந்தி சேவா சங்கம்), திரு. க. மகேசன் (பொதுச்செயலாளர் இலங்கை சைவநெறி தொண்டர் கழகம்), திரு. இ. சபாலிங்கம் (பொதுச் செயலாளர் அகில இலங்கை இந்து மகாசபை), திரு. எஸ். குமாரசாமி, திரு. ரி.சண்முகலிங்கம் (பொதுச் செயல்ாளர் சைவபரிபாலன சபை), திரு. சதா ஸ்ரீனிவாசன், (நல்லூர் ஆதீனம்) திரு. த.நடராஜா ஆகியோரே மேற்கண்ட தீர்மானத்திற்கு கைச்சாத்திட்டுள்ள பிரமுகர்களாவார். (உ—வெ)


# ஹோம் பினன்ஸ்

லிமிட்.

## திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14'', 20''

## திடகாத்திரமான

சைக்கிள்கள் (HELMET-தொப்பிகள்)

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

மின் பம்புகள்

கட்டுப்பணமுறையிலும் பெறலாம்

# ஹோம் பினன்ஸ்

லிமிட்.

இல. 82, கன்னுதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


### மனோகரன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: யாரோடு சென்றீர்? —தனியாகச் சென்றேன்.

சட்: பொலிசாருக்குக் கொடுத்த முறைப்பாட்டில் நீர் கருணகரனுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகச் சொன்னீரா? —ஞாபகமில்லை.

சட், ஆஸ்பத்திரிக்கு எத்தனை மணிக்குச் சென்றீர்? — இரவு 9-30 மணியளவில்.

சட்: இடையில் யாரைச்சந்தித்தீர்? — கருணகரனை.

சட்: ஆஸ்பத்திரிக்குச்சென்றுவிட்டு எங்கே சென்றீர்? வீட்டுக்கு.

சட்: இறந்தவர் செத்துப்போனர் என்று ஆஸ்பத்திரியில் அறிந்தீரா? — அறியவில்லை.

சட்: எத்தனைமணிக்கு வீடு சென்றீர்? — 10 மணியளவில்

சட்: பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்தீரா? - இல்லை

சட்: சம்பவம்பற்றி வேறு யாருக்கும் சொன்னீரா- சொல்லவில்லை.

சட்: பொலிசுக்குப் போனீரா? — ஆம்

சட்: யாருடன் போனீர்? — மகேந்திரன், கருணகரன், பாபு ஆகியோருடன் சென்று வாக்குமூலமளித்தேன்.

சட்; திருநாவுக்கரசு எத்தனை மணிக்கு இறந்தவர்? — தெரியாது.

சட்: மனோகரன் எங்கே? — காணவில்லை.

சட்; மனோகரனை எவ்வளவு காலமாகக் காணவில்லை. —ஒருமாதகாலமாகக் காணவில்லை; அவர் இப்போது எங்கே என்று தெரியாது.

சட்: சீவரத்தினம் பகீரதனை கண்டீரா? எங்கே இருக்கிருர்? — அவரை ஒன்றரை மாதமாகக் காணவில்லை. எங்கிருக்கிருர் என்று தெரியாது.

விசாரணை இம்மாதம் 10ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (மா)

## இப்படியும் நடக்கிறது

வவனியா மாவட்டத்தில் நூற்றுப்பத்து ஆரம்ப பாடசாலைகள் இருக்கின்றன.

இப்பாடசாலைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள், தனியொரு ஆசிரியருடன்தான் இயங்குகின்றன!

மற்றுமொரு பயங்கரம் —

சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை என்ற ஒரே காரணத்திஞல் அந்தப் பாடசாலைகள், இழுத்து மூடப்பட்டுள்ளன.

ஊடுருவி

### இந்திய ஜனதிபதி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

#### இன்றைய நிகழ்ச்சி

இன்று காலை 10 மணிக்கு இந்திய ஜனதிபதி ரயில் மூலம் அனுராதபுரத்துக்குச் செல்கிருர். மதிய உணவை அவர் ரயிலிலேயே எடுப்பார். பிற்பகல் 2.30 மணிக்கு அனுராதபுரம் ரயில் நிலையத்தைச் சென்றடைவார். ரயில் நிலையத்தில் கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. ஈ: எல். பி. ஹுருள்ளே இந்திய ஜனதிபதியை வரவேற்பார். பிற்பகல் 4.30 மணிக்கு ஜனதிபதி அமைச்சர் சகிதம் அனுராதபுரம் புனித நகரைச் சுற்றிப் பார்வையிடுவார். இன்றிரவு திஸ்ஸவேவ வாடிவீட்டில் தங்குவார்.

#### நாளைய நிகழ்ச்சி:

காலை 8 மணிக்கு அனுராதபுரத்தில் நடைபெறும் தேசிய தினக் கொண்டாட்டங்களில் ஜனதிபதி ரெட்டி கலந்து கொள்வார். பிற்பகல் 4-30 மணிக்கு ஜனதிபதி ரெட்டியை சபாநாயகர் ஜனுப் பாக்கிர் மாக்கார் சந்திப்பார். மாலை 6-15 மணியளவில் நடைபெறும் கலாசாரக் காட்சிக்குச் சமூகமளிப்பார். நாளை இரவும் அனுராதபுரத்திலேயே ஜனதிபதி தங்குவார்.

### யாழ். பல்கலைக்கழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணிப்பட்டத்தை வழங்குவதில்லை என்ற பல்கலைக்கழக மானியக் குழுவின் ஏதேச்சாதிகாரமானதும் நீதியற்றதுமான தீர்மானத்தை வன்மையாகக்கண்டிப்பதுடன் உடனடியாக இம் மாணவர்களுக்கு வணிகமாணிப் பட்டங்கள் வழங்கப்பட வேண்டும் எனத் தாம் தமது மனு மூலம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் மாணவர்கள் பல்கலைக்கழக வளவில் பின்வரும் சுலோகங்களைப் பொறித்துள்ளார்கள்.

நிர்வாகமே நித்திரையா செய்கிருய் —

வர்த்தமாணிப்பட்டம் உறுதிப் படுத்து —

நிர்வாகம் மாணவர்கள் வாழ்வுக்கு உலைவைக்கிறது. —

படிப்புக்கேற்றபட்டமளி.

(இ)

### இந்திராவின் இல்லத்தினுள் பிரவேசித்த நபர் யார்?

புதுடில்லி, பெப்.2

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் இல்லத்திற்குள் அத்துமீறிப் புகுந்த ஒருவரை பொலிசார் காவலில் வைத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் - புவனேஸ்வரி (பூஅம்மா)

சண்டிலிப்பாய் நடுக்குறிச்சியைச் சேர்ந்த புவனேஸ்வரி (பூஅம்மா) காலமானுர். இவர் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், நாகசெளபாக்கியம், மகேஸ்வரி, திரு. நாகரத்தினம், ஆனந்தவல்லி, இரத்தினவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னரின் ஈமைக்கிரியைகள் இன்று (3—2—82) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 2171

## மரண அறிவித்தல்

### சின்னையா சின்னத்தம்பி

சின்னையா சின்னத்தம்பி காலமானுர். இவர், மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், கந்தையா, சுப்பிரமணியம், மகேஸ்வரி, நடராசா, கணேசு, திருநாவுக்கரசு, பரமேஸ்வரி, சிவபாதம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னரது பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக இன்று (3—2—82) காலை 9 மணியளவில் உடுவில் ரேுட், மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: சி. சிவபாதம்

2175

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. the General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.